DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc. Brokerage
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எதிக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1468 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 24, 2024

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

# றொறன்ரோவில் நடைபெறவுள்ள 15ம் உலகத் தமிழாசிரியர்கள் மாநாட்டில் 'தமிழோசை' என்னும் சங்கத் தமிழ்ப் பாடல்கள் ஒலிக்கும் நிகழ்வை நடத்த கனடா வந்துள்ள இசையமைப்பாளர் ஜேம்ஸ் வசந்தன்

(றொறன்ரோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)



கனடாவில் தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் றொறன்ரோ மாநகரத்தில் அமைந்துள்ள றொறன்ரோ பல்கலைக் கழகத்தின் ஸ்காபுறோ வளாகத்தில் எதிர்வரும் யூன் மாதம் 1ம், 2ம், 3ம் திகதிகளில் நடைபெறவுள்ள கோலாகலமாக நடைபெறவுள்ள 15ம் உலகத் தமிழாசிரியர்கள் மாநாட்டில் தமிழ்க் கல்வி சார்ந்ததும் தமிழிசை சார்ந்தும் பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என கனடியத் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் படிமுறைத் தமிழ் ஒன்றியத்தின் நிறுவனருமான சுப்பிரமணியம் இராசரத்தினம் றொறன்ரோ விமான நிலையத்தில் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)



# 'உதயன்' சிறப்பு விருதினைப் பெறுவதற்காக பிரான்ஸ் வாழ் நிகழ்ச்சித் தொகுப்பாளர் அருள்மொழித்தேவன் றொறன்ரோ வந்துள்ளார்

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 26ம் திகதி கனடாவின் ஸ்காபுறோ நகரில் நடைபெறவுள்ள "உதயன் சர்வதேச விருது விழா-2024" இல் மூன்று வெளிநாட்டு வாழ் தமிழ் சாதனையாளர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேற்படி விருது விழாவில் ஐரோப்பியா வாழ் தமிழர்களிலிருந்து "உதயன்" சிறப்பு விருதினைப் பெறுவதற்காக தெரிவு செய்யப்பெற்றுள்ள பிரான்ஸ் வாழ் அருள்மொழித்தேவன் அவர்கள் கடந்த புதன்கிழமை 22ம் திகதி றொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கினார். (தொடர்ச்சி 18ம் பக்கம்)

107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

உலகெங்கும் நன்கு அறியப்பெற்ற வருடாந்த நிகழ்வு
உதயன் சரவதேச விருது விழா-2024
For Tickets and information: 416 732 1608 or 647 762 9512
Uthayan International Awards Festival – 2024
Dance, Music and Awards Presentation
இசை, நடனம் அத்துடன் விருதுகள் வழங்கும் நிகழ்வு
மண்டபம்:- The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
26th May, 2024 Sunday, at 6.00 PM

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கனகராசா சரவணன்

# இந்தியாவின் பின்னணியில்; சிவில் அமைப்புக்கள் பொது வேட்பாளர்; ஒரு நாடகம் ஒரு சதி

## த.தே.ம.முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ்



தமிழ் மக்களை பயன்படுத்து இதுவரை காலமும் தங்களுடைய பூலோக அரசியல் நலனுக்காக இந்த நாட்டிலே தங்களுக்கு விரும்பிய தலைவர்களை கொண்டுவந்த வல்லரசுகள் இனிமேலும் தமிழர்களை பகடக்காயாக பயன்படுத்த முடியாது அதேவேளை இந்தியாவின் பின்னணியில்; சிவில் அமைப்புக்கள் செயற்படுகின்றன எனவே பொது வேட்பாளர்; ஒரு நாடகம் ஒரு சதி என தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மேல்மாடி வீதியிலுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணி காரியாலயத்தில் புதன்கிழமை (22) மாலை இடம்பெற்று ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டிலே 1949ம் ஆண்டிற்கு பிறகு இருக்கின்ற ஒற்றையாட்சி கட்டமைப்பை அகற்றிவிட்டு ஒரு சமஸ்டி கட்டமைப்பை உருவாக்கி அதன் மூலம் தமிழர்கள் இந்த தீவிலே நிம்மதியாக வாழவேண்டும் என்ற சூழ்நிலையை உருவாக்குவது தான் எமது கோரிக்கையாகும்.

அதன் அடிப்படையில் ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள் கடந்த 75 வருடமாக தமிழ் மக்கள் தொடர்சியாக அடக்கு முறைக்கும் அடிமைத்தனத்துக்கும் உள்ளாக்கப்பட்டனர். இந்த அடக்கு முறைக்கு எதிராக தமிழர்கள் போராடிவந்து இன்று ஆயுத போராட்டம் பாரிய ஒரு உயிர்சேதங்களை ஏற்படுத்தி கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்து நிற்கின்ற சூழ்நிலையிலே மீண்டும் அந்த ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை ஆதரிக்கப் போகின்றோமா? அல்லது சமஸ்டி கட்டமைப்புக்காக குரல் கொடுக்கப் போகின்றோமா? என்ற விடையத்தை நாங்கள் தெளிவடைய வேண்டும்.

கடந்த 2012ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு ஒற்றையாட்சி அரசியல் அமைப்புக்கு இனங்கி அவர்கள் மக்களுக்கு தமிழ் தேசியத்தை கூறிக்கொண்டு மாறாக 2016ம் ஆண்டு அரசியல் அமைப்பு தயாரிக்கப்பட்டது அதில் 6 பேர் கொண்ட குழுவில் கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தன் மற்றும் ஊடக பேச்சாளர் எம். சுமந்திரன்; இருந்தனர்.

அதில் அவர்கள் ஏக்கிய ராஜ்சிய என்ற வார்த்தையை பிரயோகித்து மக்களை ஏமாற்றி ஒற்றியாட்சி அரசியல் அமைப்புக்கு எதிராக போராடிவந்த அந்த நிலையை மாற்றி அவர்களாகவே ஏற்றுக்கொள்ளக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும் விதமாக இவர்கள் ஒரு பச்சை துரோகத்தை செய்கின்ற போது அந்த நேரத்தில் வடக்கு கிழக்கில் தமிழர்கள் எழுக தமிழர் என்ற மக்கள் எழுச்சியை ஏற்படுத்தி சர்வதேச சமூகத்திற்கு தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் இது தான் என மக்கள் எழுச்சி மூலம்; தெரியப்படுத்தினர்.

அன்றைய நேரத்தில் இந்த சிவில் அமைப்புக்கள் நித்திரை கொண்டதா? அல்லது கோமாவில் இருந்தனரா? என்பது தான் எனது கேள்வி ஆகவே எங்களை பொறுத்தமட்டிலே ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் எல்லாம் ஒரு நாடகம் ஒரு சதி இதற்கு பின்னணியில் இந்தியா நிற்கின்றது.

இந்தியா விரும்புகின்ற நபர்களே அரசியல் தரப்புக்களையே காட்டினால் அவர்களுக்கு வாக்களிக்கமாட்டார்கள் அவர்களின் சொல்லை கேட்கமாட்டார்கள் என்பதற்காக இப்படிப்பட்ட சிவில் அமைப்புக்கள் போன்றவற்றை தங்களின் நிகழ்சி நிரலை நிறைவேற்றுவதற்காக இப்படிப்பட்ட கைங்கரியங்களை இந்தியா செய்கின்றது.

தேர்தல் பகிஸ்கரிப்பு விடையத்தில் மூன்று விடையங்களை சொல்ல இருக்கின்றோம் அதில் முதலாவது ஜனாதிபதியாக வார விரும்புவருக்கு ஒரு செய்தியை சொல்ல இருக்கின்றோம் அவர் ஜனாதிபதியாக வந்தால் தமிழ் மக்கள் ஏனையவர்களுக்கு வாக்களித்திருந்தால் தான் ஜனாதிபதியாக வந்திருக்க முடியாது என்ற விடையத்தையும்.

இரண்டாவதாக ஜனாதிபதியாக வராமல் தோற்றவர்கள் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளை ஏற்றுக் கொண்டு எழுத்து மூலம் கொடுத்திருந்தால் நாங்கள் ஜனாதிபதியாக வந்திருக்கலாம் என்ற விடையத்தையும்.

மூன்றாவதாக இந்த தமிழ் மக்களை பயன்படுத்து இதுவரை காலமும் தங்களுடைய பூலோக அரசியல் நலனை இந்த நாட்டிலே தங்களுக்கு விரும்பிய தலைவர்களை கொண்டுவந்த இந்த வல்லரசுகள் இனிமேலும் வந்து தமிழர்களை நாங்கள் பகடக்காயாக பயன்படுத்த முடியாது அவர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிய பிறகுதான் தாங்கள் விரும்பிய தலைவர்களை கொண்டுவர இந்த மக்களிடம் கேட்கலாம் என்ற நிலைப்பாட்டை உருவாக்குவதற்காகதான் இந்த தேர்தல் பகிஸ்கரிப்பை நாங்கள் அறிவித்தோம் என்றார்.

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா ஒன்ராறியோ மாகாண அரசின் "ஒற்றைக் கட்டணத்" திட்டத்தினால் 5 மில்லியனுக்கும் அதிகமான பயணிகள் இதுவரை பயனடைந்துள்ளனர்




ஒன்ராறியோ அரசு மாநில பொதுப்போக்குவரத்துக் கட்டமைப்பில் “ஒற்றைக் கட்டண” ஒருவழிப் பயணத் திட்டத்தை பெப்ரவரி 26ஆம் திகதியன்று அறிமுகப்படுத்தியது.

இவ்வொற்றைக் கட்டணத் திட்டம், ரிரிசி (TTC), “கோ” (GO) ஆகிய போக்குவரத்துச் சேவைகளுக்கிடையேயும் பின்வரும் பின்வரும் சேவைகளுக்குமிடையிலான பயணிகள் மாறுகையின்போது பயணிகள் ஒன்றுக்கு மேற்பட்ட கட்டணங்களைச் செலுத்துவதைத் தவிர்த்து, அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு சராசரியாக 1600 டொலர்களைச் சேமிக்க உதவுகிறது. இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள போக்குவரத்துச் சேவைகளாவன:

மிசிசாகாவின் “மைவே” போக்குவரத்து
பிரம்டன் போக்குவரத்து
டுறம் பிராந்திய போக்குவரத்து
யோர்க் பிராந்திய போக்குவரத்து
பரி போக்குவரத்து
பேர்லிங்டன் போக்குவரத்து
பிராட்ஃபோர்ட் மேற்கு குவில்லிம்பெரி போக்குவரத்து
கிராண்ட் றிவர் போக்குவரத்து
கல்ஃப் போக்குவரத்து
ஹமில்டன் ஸ்ட்ரீட் ரயில்வே
மில்டன் போக்குவரத்து
ஓக்வில் போக்குவரத்து

இத்திட்டம் ஆரம்பித்த ஒரு சில மாதங்களிலேயே மேற்படி சேவைகளுக்கிடையிலான 5 மில்லியனுக்கும் அதிகமான பயணிகள் மாறுகைகள் இடம்பெற்றுள்ளன. இந்தத் திட்டத்தின் பயனாக பலர் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

“5 மில்லியன் பயணிகள் மாறுகையை நிறைவுசெய்யும் இவ்வற்புதமான தருணமானது, போக்குவரத்துச் சேவைகளுக்கிடையிலான பயணிகள் மாறுகைத் திட்டம் பயணிகளுக்கு மலிவான கட்டணத்திலும், அவர்கள் பிராந்தியத்தின் ஏனைய பகுதிகளைச் சென்றடைவதை இலகுவாகவும் மாற்றியுள்ளதென்பது இத்திட்டத்தின் வெற்றிக்குச் சான்றாகும்” என ஒன்ராறியோவின் போக்குவரத்து அமைச்சின் இணை அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் தெரிவித்தார்.

பயணிகள் “பிரெஸ்டோ” (PRESTO) கட்டண அட்டை, கடனட்டை, வங்கி அட்டை, கூகிள் வொலட்டில் உள்ள பிரெஸ்டோ செயலி போன்ற தாம் விரும்பும் தெரிவுகளைப் பயன்படுத்தலாம். அதேநேரத்தில், ஐஃபோன் மற்றும் அப்பிள் கடிகாரம் ஆகிய கட்டணத் தெரிவுகளும் விரைவில் உங்கள் பிரெஸ்டோ அட்டையுடன் சேர்க்கப்படும்எனவும் ஒன்றாரியோ அரசின் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.






# ரஷ்யா உக்ரைன் போருக்கு இலங்கையில் ஆட்சேர்ப்பு குறித்து அதிகரிக்கும் புகார்கள்

## மோதலில் பாதுகாப்புப் படையின் முன்னாள் வீரர்கள் மட்டுமின்றி ராணுவப் பயிற்சி ஏதும் இல்லாத குடிமக்களும் கூலிப்படையாக சேர்க்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியானது

- நடராசா லோகதயாளன்

ரஷ்யா - உக்ரைன் போரில் ஈடுபடுவதற்காக கூலிப்படை நிறுவனங்களால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட குடிமக்களின் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து இலங்கையின் பாதுகாப்பு அமைச்சகத்திற்கு 400 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இராணுவப் பின்னணியைக் கொண்ட இலங்கைப் பிரஜைகள் உக்ரேனில் போரிடுவதற்காக கடத்தப்படுவதாக வந்த தகவல்கள் தொடர்பாக அதிகாரிகள் இந்த மாத தொடக்கத்தில் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதற்குப் பதிலடியாக, ரஷ்யாவுக்காக முதன்மையாகப் போரிடும் முன்னாள் ராணுவ வீரர்கள் எதிர்கொள்ளும் கொடிய நிலைமைகளை, திரும்பி வந்த சிலர் அம்பலப்படுத்தியதை அடுத்து, பாதுகாப்பு அமைச்சகம் குடும்ப உறுப்பினர்களுக்கு முறைப்பாடுகளை அளிக்க அவசர அழைப்பு ஒன்றை அமைத்தது.

அதன்மூலம் இதுவரை மொத்தம் 411 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்யா - உக்ரைன் மோதலில் பாதுகாப்புப் படையின் முன்னாள் வீரர்கள் மட்டுமின்றி ராணுவப் பயிற்சி ஏதும் இல்லாத குடிமக்களும் கூலிப்படையாக சேர்க்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியானது.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

Canada
We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# தாயகத்தின் தமிழர் பகுதிகளில் அதிகரிக்கும் மதவெறியும் நிலவெறியும் எமது மக்களை பல வழிகளில் பாதிக்கின்றன!

இலங்கையில் எமது தமிழர் தாயகத்தின் தமிழர் பகுதிகளில் என்றும் இல்லாத அளவிற்கு அதிகரித்துச் செல்லும் மதவெறியும் நிலவெறியும் எமது மக்களை பல வழிகளில் பாதிக்கின்றன. இதனால் அவர்கள் அனுபவிக்கும் துன்பியல் படலங்களை நாம் தினமும் வாசிக்கும் செய்திகளிலிருந்து அறிந்து கவலையும் கோபமும் கொண்டவர்களாக மாறி வருகின்றோம்

வடக்கிலும் கிழக்கிலும் மதவெறிகொண்டுள்ள ரணில் தலைமையிலான அரசாங்கத்தின் மதம் சார்ந்த ஓரவஞ்சகத் தனத்தை நன்கு புரிந்து கொள்ளும் வகையில் அங்கு வடக்கில் ஓராண்டு கடந்து தொடர்கிறது தையிட்டி போராட்டம்! இந்த தையிட்டி விகாரையை அகற்றுங்கள் என்று போராட்டம் நடத்தி வரும் மக்கள் தினமும் அங்கு கூடிவருகின்றனர். மேற்படி விகாரை அமைக்கும் விவகாரம் சட்டவிரோதமானது என்று அறிவித்த வண்ணம் தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் ஓராண்டு கடந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த விகாரையானது தமிழ் மக்களது காணிகளை அபகரித்து சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் அந்த விகாரையை அகற்றுமாறு கோரி ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதே வேளையில் வட மாகாணத்தின் கலங்கரை விளக்காகத் திகழும் மன்னார் தீவக பகுதிக்குள்ளும் அரசாங்கம் சார்ந்து அரச அதிகாரிகளின் கபடத்தனம் காரணமாக அங்கு அதிகார துஸ்பிரயோகங்கள் இடம்பெறுவதாக தெரிவிக்கும் செய்திகளும் நாளாந்தம் வந்தவண்ணம் உள்ளன என்பதை நாம் காண்கின்றோம். தனியாருக்கு சொந்தமான காணிகளை தொடர்ச்சியாக சில காணி இடைத்தரகர்கள் ஊடாக சில தனியார் கம்பெனிகள் சட்ட விரோதமாக சுவீகரிக்கும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளை நிறுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் தொடர்பாக கலந்தாலோசிக்கும் முகமாக மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் மற்றும் பாதிக்கப்பட்ட தனியார் காணி உரிமையாளர்களுக்கும் இடையில் சந்திப்பு நேற்று வியாழக்கிழமை 23ம் திகதி நடைபெற்றுள்ளது மேற்படி சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் சாட்சியங்களின் போது அரசாங்கமும் அரச அதிகாரிகளும் கூட்டாக இந்த அத்துமீறிய அதிகார துஸ்பிரயோகச் செயல்களில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தார்கள்.குறித்த கலந்துரையாடலில் மன்னார் நடுக்குடா,கொன்னையன் குடியிருப்பு போன்ற பகுதிகளில் பாரம்பரியமாக தாங்கள் வசித்து வரும் காணிகளை தனியார் நிறுவனங்கள் தொடர்ச்சியாக அடாத்தாக வேலிகள் அடைத்து கையகப் படுத்துவதாகவும், இது தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு செய்தாலும் பொலிஸார் நடவடிக்கை எடுப்பது இல்லை என தனியார் காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். அதே நேரம் தனி காணி ஒன்றை கொள்வனவு செய்யும் சில நிறுவனங்கள் அந்த காணிகள் மாத்திரம் இன்றி அதை சூழ உள்ள காணிகளையும் சுவீகரிப்பதாகவும் குற்றம் சுமத்தியிருந்தனர்

இவற்றையெல்லாம் நாம் உற்று நோக்குகின்ற போது அரசாங்கம் மற்றும் அரச அதிகாரிகள் வடக்கு கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளும் துஸ்பிரயோக நடவடிக்கைகளினால் எமது தமிழர் பிரசேதத்தின் 'இருப்பு' பாதிக்கப்படவுள்ளது என்பதே நன்கு புலனாகின்றது



Toronto சிட்டி கவுன்சிலர்
PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டணத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்
Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

லண்டன், ஒன்டாரியோ கனடாவில் லாபகரமான வணிக இடம் உங்களுக்காகக் காத்திருக்கிறது!
(Profitable Commercial Property Awaits You in Canada!)
இடம்: லண்டன், ஒன்டாரியோ - பரபரப்பான டவுன்டவுன் மையப்பகுதி
(London, Ontario - Bustling Downtown Core)

பயன்பாடுகள் (நகர ஒப்புதல் பெற்ற மண்டல வரையறை): (Zoning & Usages): வழிபாட்டுத் தலங்கள் (Temples, Places of Worship), மருத்துவமனைகள் (Doctor's Offices), உணவகங்கள் (Restaurants), குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் (Daycare Centers), பள்ளிகள் (Schools), விழா அரங்கங்கள் (Party Halls), இதற்கு மேற்பட்டவை (and much more!)

சிறப்பம்சங்கள்: (Highlights)
பரபரப்பான இடம் - பொது போக்குவரத்து சில விநாடிகள் தூரத்தில் உள்ளது (Busy Location - Public Transportation Seconds Away)
வழிபாட்டுத் தலத்திற்கான அனுமதி பெற்ற வரைபடங்கள் கிடைக்கும் (City-Approved Permits and Drawings Available for a Place of Worship)
இரண்டு புதுப்பிக்கப்பட்ட கழிப்பறைகள் (2 Fully Renovated Washrooms)
3100 சதுர அடி பரந்த இடம் - பெரிய திறந்தவெளி கூடத்துடன் (3100 SQF Space with Large Open Gathering Area). விலை: $329,000 (Negotiable)

இந்த வாய்ப்பு விரைவில் கைவிட்டுப் போகலாம்! (This Opportunity Won't Last Long! Serious Inquiries Only.)

தொடர்புக்கு: (Contact:): Sathyan at 226-786-2008

For All your Renovation Needs!

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
416-706-8160

Condo Apartment for Rent
கொண்டோ அப்பார்ட்மண்ட் வாடகைக்கு
Kennedy/Ellesmere சந்திப்புக்கு அருகில் உள்ள Condo அப்பார்ட்மண்ட் 3 Rooms, 1 Wash Room அடங்கலாக அனைத்து வசதிகளோடும் வாடகைக்கு உடனடியாக வழங்கப்படும். இன்டர் நெற் மற்றும் தொலைக்காட்சி இணைப்பு ஆகியன இலவசம். 1 Parking உண்டு. பஸ் வசதி மற்றும் தமிழர்கள் கடைகள் சுப்பர் மார்க்கட் ஆகியன மிக அருகில். கென்னடி புகையிரத நிலையத்திற்கும் விரைவாக செல்ல முடியும்.
விபரங்களுக்கு:
416-757-0034 / 416-994-3861

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# ரெலோவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!







15 ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட பணிமனையில் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் சபா குகதாஸ் அவர்களின் பொதுச் சுடர் ஏற்றலுடன் ஆரம்பிக்கப்பட்டது.

கட்சி உறுப்பினர்களின் பங்குபற்றலுடன், முன்னாள் வலி கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஸ் முன்னாள் யாழ்ப்பாண மாநகர பிரதி மேயர் ஈசன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

முள்ளிவாய்க்கால் போர்க்களத்தில் இருந்து மீண்டு வந்த போரின் சாட்சியமான சபா குகதாஸ் நினைவுரை ஆற்றினார்.

# யாழ்ப்பாணத்தில் பிறந்தநாள் அன்று யுவதி மீது வாகனத்தால் மோதி உயிரைப் பறித்த இராணுவம்!

பிறந்தநாளில் இராணுவ வாகனம் மோதி யுவதி ஒருவர் யாழ்ப்பாணத்தில் 20-05-2024 அன்று உயிரிழந்துள்ளார்.

வாதரவத்தையைச் சேர்ந்த சுதாகரன் சாருஜா என்ற 23 வயதான யுவதியே உயிரிழந்துள்ளார்.

புத்தூர் - கனகம்புளியடி வீதியில் வீரவாணி சந்தியில் துவிச்சக்கர வண்டியில் குறித்த யுவதி சென்ற போதே விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே யுவதி உயிரிழந்துள்ளார். யுவதியின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துச் சம்பவம் தொடர்பாக இராணுவத்தினரிடம் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வற்றாப்பளை கண்ணகை அம்மனை தரிசித்து விட்டு வந்த யாழ்ப்பாண பக்தர்களுக்கு ஏற்பட்ட சோகம்!



யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்பு - சாந்தை பகுதியில் இருந்து வற்றாப்பளை ஆலயத்திற்கு சென்று தரிசனம் செய்துவிட்டு வந்த பக்தர்கள் பேருந்து தடம்புரண்ட நிலையில் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், மேற்குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த பக்தர்கள் ஒன்றுசேர்ந்து பேருந்து ஒன்றினை வாடகைக்கு அமர்த்தி வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு சென்று தரிசனம் செய்துவிட்டு 21-05-2024 அன்று காலை யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தனர்.

இந்நிலையில் பூநகரி பாலம் தாண்டி வந்துகொண்டிருந்த போது பேருந்து தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. இந்நிலையில் பேருந்தில் பயணித்த ஆறு பயணிகள் படுகாயம் அடைந்தனர்.

இந்நிலையில் அவர்கள் பூநகரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அங்கிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சட்டவிரோத தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக கொதித்தெழுந்த பலநூறு மக்கள்!



சட்டவிரோத திஷ்ட விகாரைக்கு எதிரான போராட்டமானது ஒரு வருடத்தை தாண்டிய நிலையில் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இந் நிலையில் பௌர்ணமி தின வழிபாடுகள் ஆரம்பமாக இருந்த நிலையில் போராட்டம் ஆரம்பமானது. இந்நிலையில் தென் பகுதியில் இருந்து மக்கள் குறித்த விகாரைக்கு வழிபாடுகளை மேற்கொள்வதற்காக வருகை தந்திருந்தனர்.

இதன்போது பல நூற்றுக்கணக்கான மக்கள் அணி திரண்டு, அனுமதியின்றி மக்களது காணியில் கட்டப்பட்ட குறித்த சட்டவிரோத விகாரையை அகற்றுமாறு கோரி போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் “தையிட்டி எங்கள் சொத்து, வடக்கு கிழக்கும் தமிழர் தாயகம், மண் துறந்த புத்தருக்கு மண் மீது ஆசையா, பலாலி பொலிஸ் பொறுப்பு அதிகாரி ஒரு கொலைகாரன், பௌத்தத்தின் பெயரால் காணிகளை அபகரிக்காதே, இந்த மண் எங்களின் சொந்த மண், சட்டவிரோத விகாரைக்கு காவல்துறை காவலா, பௌத்தத்தின் போதனை சட்டவிரோத ஆக்கிரமிப்பா” என கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டமானது எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தொடரும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், காணியின் உரிமையாளர்கள், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News



# இத்தாவில் மாதுளைச் செய்கை தோட்டத்திற்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம் – விரிவாக்கம் தொடர்பில் ஆராய்வு!

பு. கஜிந்தன்

பளைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் மாதுளைச் செய்கை மாதிரித் தோட்டத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டுள்ளார்.

பளை இத்தாவில் கிராமத்தில் குறித்த மாதிரி தோட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மாதுளை பயிர்ச் செய்கையில் எதிர்கொள்ளப்படும் ஏதுனிலைகள் தொடர்பில் துறைசார் அதிகாரிகள், விவசாயிகள் ஆகியோருடன் அமைச்சர் கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது குறித்த பயிர்ச்செய்கையில் அறுவடைக்காலம் வரையிலான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் ஊடுபயிர் செய்கையின் பெறுபேறுகள் குறித்தும் ஆராயப்பட்டது

இந்நிலையில் குறித்த பயிர்ச்செய்கையின் அறுவடைகளை சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மற்றும் பொதுவான விற்பனை மையம் தொடர்பிலும் இடர்பாடுகள் குறித்தும் தெரியப்படுத்திய விவசாயிகள் குரங்குகளால் ஏபற்படும் அசௌகரியங்கள் குறித்தும் சுட்டிக்காட்டி அவற்றுக்கான ஏற்பாடுகளை செய்துதருமாறும் கோரியிருந்தனர்

குறித்த தோட்டத்தின் ஏது நிலைகள் மற்றும் கருத்துக்களை அவதானத்தில் கொண்ட அமைச்சர் அது தொடர்பில் ஆராய்ந்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகளை செய்துதருவதாக கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# மழை அனர்த்தம் காரணமாக யாழ்ப்பாணத்தில் கோவில் ஒன்றின் கூரை முழுமையாக சேதம்!

மழையுடன் வீசிய காற்று காரணமாக யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயம் ஒன்றின் கூரை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதா யாழ்ப்பாண அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/21 கிராம சேவகர் பிரிவில் உள்ள ஆலயம் ஒன்றின் கூரையே இவ்வாறு சேதமடைந்துள்ளது. இருப்பினும் உயிராபத்துக்கள் எவையும் ஏற்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# பிள்ளைகள் வெளி நாட்டில்: மன விரக்தி அடைந்த முதியவர் உயிர்மாய்ப்பு – யாழ்ப்பாணத்தில் சம்பவம்!

மன விரக்தியில் இருந்த முதியவர் ஒருவர் 17-05-2024 அன்றையதினம் தவறான முடிவெடுத்து கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார். இதன்போது ஏழுகோவில் ஏழாலை கிழக்கு பகுதியைச் சேர்ந்த ஐயாத்துரை தியாகராஜா (வயது 76) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த முதியவரின் மனைவி உயிரிழந்துள்ளார். அவரது பிள்ளைகள் அனைவரும் வெளிநாட்டில் வசித்து வருகின்ற நிலையில் குறித்த முதியவர் வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் மன விரக்தியடைந்த அவர் இன்றையதினம் அவரது வீட்டில் உள்ள கிணற்றில் விழுந்து உயிர்மாய்த்துள்ளார். இந்த காட்சி அங்கிருந்த சி.சி.டி கேமராவில் பதிவாகியுள்ளது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழர்கள் ஜனாதிபதி தேர்தலை புறக்கணியுங்கள்: இந்திய காவிப் புலனாய்வு தொடர்பில் எச்சரிக்கையாக இருங்கள் - கஜேந்திரன் எம்.பி வேண்டுகோள்



தமிழ் மக்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்கும் சபதத்தை மே 18 சனிக்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் நிறைவேற்றுவதற்கு அனைத்து தமிழ் மக்களும் அணி திரள வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் அழைப்பு விடுத்தார்.

17-05-2024 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு முன்னால் அமைக்கப்பட்ட தமிழர் இனப்படுகொலை வரலாற்று நினைவிடத்தை பார்வையிட்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 75 வருட காலமாக ஆட்சி பீடம் ஏறிய எந்த ஒரு அரசாங்கமும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்களை முன்னெடுத்துச் செல்லாத நிலையில் தமிழ் மக்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்க வேண்டும்.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலுடன் இறுதி யுத்தம் நிறைவடைந்த நிலையில் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் 15ஆவது நினைவேந்தல் சனிக்கிழமை இடம்பெற உள்ள நிலையில் அனைத்து தமிழ் மக்களும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்ற சபதத்தை எடுக்க வேண்டும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களை கொலை செய்து துன்புறுத்தி மற்றும் பெண்களை பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாக்கி அட்டூழியங்களை செய்து வந்துள்ளது.

தமிழ் தலைவர்கள் ஜனநாயக வழியில் தமிழ் மக்களின் உரிமைக்காக போராடிய போது சிங்கள அரசாங்கம் அவர்களை கொலை செய்த நிலையில் 1980 பின் தமிழ் மக்களின் உரிமைக்காகவும் இருப்புக்காகவும் தமிழ் இளைஞர் யுதிகள் ஆயுதம் ஏந்துவதற்கு நிர்பந்திக்கப்பட்டனர்.

தமிழ் மக்களின் உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தை ஒடுக்குவதாக கூறிய சிங்கள அரசாங்கம் ஒட்டுமொத்த தமிழ் இனத்தையும் அழித்த வரலாற்றே மிஞ்சியது.

2006 ஆம் ஆண்டு இறுதி யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் சர்வதேசத்தின் உதவியுடன் சுமார் ஒன்றரை இலட்சம் அப்பாவி தமிழ் மக்களை இனப்படுகொலை செய்தார்கள்.

தமிழ் மக்களை இனப்படுகொலை செய்ததில் சிறிலங்கா முப்படையுடன் சேர்ந்து அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட்ட தமிழ் ஆயுத குழுக்களான கருணா குழு, பிள்ளையான் குழு, புளொட் அமைப்பு, டக்ளாஸ் தேவானந்தாவின் ஈபிடிபி, சிறிரெலோ ஆகியவற்றினால் படுகொலை செய்யப்பட்டவர்களை நல்லூரில் காட்சிப்படுத்தியுள்ளோம்.

இதனை ஏன் காட்சிப்படுத்தினோம் என்றால் எமது இனத்தை படுகொலை செய்த வரலாறுகள் எதிர்கால சந்ததியினருக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகவும் எதிர்கால சந்ததிகினருக்கு இதனை எடுத்துச் செல்லும் நோக்கிலும் காட்சிப்படுத்தினோம்.

2010 ஆம் ஆண்டிலிருந்து எமது இயக்கம் இறுதி யுத்ததில் எமது மக்கள் அருந்திய முள்ளிவாய்க்கால் கஞ்சியினை எமது எதிர்கால சந்ததியினருக்கு கடத்தும் நோக்கில் எமது இயக்கமே ஆரம்பித்து வைத்தது.

எமது வரலாற்று நிகழ்வான இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி வாரத்தை குழப்பும் நோக்கில் காவி உடை தரித்த இந்திய புலனாய்வு அமைப்பு செயற்பாட்டு வருகின்ற நிலையில் குறித்த அமைப்பின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

தமிழ் மக்கள் ஒற்றை ஆட்சியையும் பதின் மூன்றாவது திருத்தத்தையும் ஏற்க மறுத்ததன் விளைவே எமது இனம் அழிக்கப்படுவதற்கு பிரதான காரணமாக அமைந்தது.

தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற தமிழ் தேசம் இறைமை சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி அரசியல் அமைப்பையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். எமது இனத்தின் மீது நிகழ்த்தப்பட்டது இனப் படுகொலை என்பதை இலங்கை அரசும் சர்வதேசமும் ஏற்க வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை அரசாங்கத்தை பாரப்படுத்துவதே தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுத்தரும்.

முள்ளிவாய்க்கால் ஏற்பாட்டுக் குழுவுக்கு நாம் ஒன்றை கூற விரும்புகிறோம் நாங்கள் பலமுறை வலியுறுத்தினோம் முள்ளிவாய்க்கால் நினைவு வார இறுதியில் எமது உறுதி மொழியாக ஒற்றை ஆட்சியை நிராகரிப்போம் 13 வது திருத்தத்தை நிராகரிப்போம் நல்லாட்சி அரசாங்கத்தில் கொண்டு வந்த ஏக்கிய ராஜ்சிய என்ற இடைக்கால வரவை நிராகரிப்போம் என உறுதிமொழி எடுக்குமாறு கூறியிருந்தோம் அது நடைபெறவில்லை.

அகவை எமது பயணத்தை யாரும் திசை மாற்றக் கூடாத நிலையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை எமது மக்கள் புறக்கணிப்பதோடு இந்திய காவியப் புலனாய்வாளர்கள் தொடர்பிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.



# "இலங்கையில் தமிழ் மக்களுக்கு நீதி இன்னும் கிடைக்கப் பெறவில்லை

## முள்ளிவாய்க்காலில் அஞ்சலி செலுத்திய சர்வதேச மன்னிப்பு சபை செயலாளர் நாயகம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



(18-05-2024)

முள்ளிவாய்க்கால் முற்றத்தில் 18-05-2024 அன்று இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் தின நினைவேந்தல் நிகழ்வில், சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் ஆக்னெஸ் காலமார்ட் (Agnès Callamard) கலந்துகொண்டு முள்ளிவாய்க்கால் நினைவு தூபிக்கு மலர் தூவி வணங்கினார்.

அக்னெஸ் கலமார்ட் இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், "இலங்கையில் தமிழ் மக்களுக்கான நீதி இன்னும் கிடைக்கப் பெறவில்லை என்பதை சர்வதேசத்துக்கு கூறுவதே எங்களின் முதன்மையான நோக்கம்.

அதற்குரிய விசாரணைகளை நடத்துவதற்கான படிநிலைகளை நாம் மேற்கொள்ளவுள்ளோம்" என தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கு கிழக்கு உள்ளிட்ட தமிழர் பகுதிகளில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடாத்துவதற்கு பாதுகாப்பு தரப்பினரால் பல்வேறு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்ட நிலையிலும் மக்களின் பேரெழுச்சியுடன் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு மாகாண அமைச்சுக்களின் தகுதியானவர்களுக்கு அமைச்சு வழங்காத ஆளுநர். காத்திருக்கும் அதிகாரிகள்!



வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களுக்கான வெற்றிடங்கள் நிலவும் நிலையில் தகுதியான அதிகாரிகள் இருந்தும் நியமிக்காத நிலை காணப்படுகிறது.

குறித்த விடயம் தொடர்பில் தெரியவருவதாவது, வட மாகாண அமைச்சுக்களான கல்வி சுகாதாரம் மகளிர் விவகாரம் மற்றும் ஆளுநரின் செயலாளர் ஆகியன தொடர்ந்தும் பதில் செயலாளர்கள் கடமையில் உள்ளனர்.

இவ்வாறான நிலையில் அண்மையில் நிர்வாக சேவை சிறப்பு தரத்திற்கு பதவி உயர்வு பெற்ற அன்ரன் எழிலரசி, அருள் நாதன் ஆகியோர் வடக்கு மாகாண சபைக்கு உள்ளீர்க்கப்படட போதிலும் அவர்களுக்குரிய பதவி நிலைகள் வழங்கப்படவில்லை.

அது மட்டுமல்லாது கடந்த ஏழு மாதங்களாக வடக்கு மாகாண சபைக்கு உள்ளீர்க்கப்படட நிர்வாக சேவை திறப்புத்தர அதிகாரியான ஆழ்வார் பிள்ளை சிறீக்கு அமைச்சு ஒன்றின் செயலாளர் பதவி வழங்காமல் தொடர்ந்தும் மாகாண சபையில் உள்ளார்.

வடக்கு மாகாண சபை அமைச்சுக்களில் சுகாதார அமைச்சு அத்தியாவசிய துறையாக உள்ள நிலையில் மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக உள்ள ஜெகுவுக்கு பதில் கடமை செயலாளராக சுகாதார அமைச்சு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண அமைச்சுக்களில் உள்ள மூன்று செயலாளர்கள் உரிய தரத்தினை பூர்த்தி செய்யாத அதிகாரிகளாக காணப்படும் நிலையிலும் விவசாய அமைச்சின் செயலாளர் ஜெகுவுக்கு மேலதிகமாக சுகாதார அமைச்சையும் வழங்கியமை அதிகாரிகள் மட்டத்தில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே வடமாகாண அமைச்சுக்கள் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் நிலையில் உரிய தரத்தினை பூர்த்தி செய்த அதிகாரிகளை அமைச்சுக்கு க்கு நியமிப்பதற்கு ஆளுநர் நடவடிக்கை எடுக்காததன் பின்னி என்ன என பலரும் கேள்வி எழுப்புகின்றனர்.

# திருச்சியிலிருந்து வெளிவரும் இனிய நந்தவனம் மாத இதழின் 27வது ஆண்டு மலர் அறிமுக விழா மலேசியாவில் அறிமுகம்



திருச்சியிலிருந்து வெளிவரும் இனிய நந்தவனம் மாத இதழின் 27வது ஆண்டு மலர் அறிமுக விழா மலேசியாவில் கோலாலம்பூர், செந்தூல் முத்தமிழ் படிப்பகத்தில் 20-05-2024 அன்று சிறப்பாக நடைபெற்றது.

முத்தமிழ் படிப்பக செயலாளர் விலயா மணி தலைமையில் தமிழறிஞர் அரசேந்திரன் இனிய நந்தவனம் முதல் பிரதியை வெளியிட டத்தோ டாக்டர் கலைலவாணர் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார் மலேசியா தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் மோகனன் பெருமாள் சிறப்புரையாற்ற கவிஞர் ந.பச்சை பாலன், முனைவர் ராஜகோபால். எழுத்தாளர் மகேஸ்வரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர், தமிழ்நாட்டிலிருந்து நிகழ்வில் கலந்து கொண்ட ஒசூர் அறம் இலக்கிய அமைப்பின் தலைவர் அறம் கிருஷ்ணன், புலவர் தி.வே. விஜயலட்சுமி, கவிஞர் நேசா ஆகியோர் கருத்துரை வழங்க புலவர் நாச்சியப்பன் கவிதை வாசித்தார், முன்னதாக இனிய நந்தவனம் மாத இதழின் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் அனைவரையும் வரவேற்றார், மலேசியா எழுத்தாளர்கள், தமிழறிஞர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


# Thana Insurance Inc

THANA INSURANCE Inc.

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

# தமிழ்ப் பொது வேட்பாளர்: தமிழரசியலில் உத்வேகத்தைப் பெறுகின்றதா?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

கடந்த வாரம் நினைவு கூர்தலின் பின்னணியில், யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் ஒரு மின்னூடகம் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது. நோர்வேயின் அனுசரணையோடு இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே நடந்த ஒரு சந்திப்பின் போது வெளியிடப்பட்ட ஒஸ்லோ ஆவணம் ஒன்றினைப் பற்றியது அந்த செய்தியாகும். தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவராகிய சம்பந்தர் அந்த ஆவணத்தை முன்னிறுத்தி தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிராக கருத்து தெரிவித்திருந்தார் என்று அந்த செய்தி கூறுகிறது. சம்மந்தர் அப்படியெல்லாம் கருத்துக் கூறக்கூடிய ஆரோக்கியத்தோடு காணப்படுகிறாரா என்பது தமிழ் அரசியல் சூழலில் தொடர்ந்தும் சந்தேகமாகவே உள்ளது. அதைவிட முக்கியமாக கடந்த 15 ஆண்டுகளாக அவர் சமாதான முயற்சிகளின்போது தொட்டுக்கூடப் பார்க்காத அந்த ஆவணத்தை எதற்காக இப்பொழுது தூக்கி எடுத்து முதன்மைப்படுத்த வேண்டும் என்ற கேள்வியும் எழுகின்றது.

முதலாவதாக, அந்த ஒஸ்லோ ஆவணம் என்ன கூறுகிறது என்று பார்க்கலாம். அது ஒரு பிரகடனம் அல்ல. ஆங்கிலத்தில் Oslo communique என்றுதான் காணப்படுகின்றது. தமிழில் அதனை நிலைப்பாட்டு ஆவணம் என்று கூறலாம். அதில் போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புகளும் ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வந்திருந்தன. அந்த நிலைப்பாடு பின்வருமாறு.... “உள்ளக சுய நிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில், தமிழ் பேசும் மக்களுக்கு, தமது வரலாற்று ரீதியிலான, பாரம்பரிய வாழ்விடத்தில், சமஸ்ரி அடிப்படையிலான தீர்வு தொடர்பாக இரு சாராரும் ஆராய ஒப்புக்கொள்கின்றோம்.” அதாவது உள்ளக சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஸ்ரி அடிப்படையிலான ஒரு தீர்வை ஆழமாக ஆராய்வது என்றுதான் அங்கு கூறப்பட்டிருக்கிறது.

அதன்படி இனி வரும் காலங்களில் பேச்சுவார்த்தை மேசைகளில் அது போன்ற ஒரு தீர்வை குறித்து ஆராய விரும்புகிறோம் என்றும் வியாக்கியானம் செய்யலாம். ஆனால் கடந்த 15 ஆண்டுகளாக பேச்சுவார்த்தை மேசைகளில் அந்த ஆவணத்தைப் பற்றி யாரும் உரையாடியதாக ஞாபகம் இல்லை.

குறிப்பாக, ஈழத் தமிழர்களின் நவீன அரசியல் வரலாற்றில், தமிழ் மக்கள் மத்தியில் இருந்து அதிகளவு தீர்வு முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்ட ஒரு காலகட்டமாக 2015 ஆம் ஆண்டிலிருந்து 2021 வரையிலுமான காலகட்டத்தைக் கூறலாம். இதில் 2015 இல் தொடங்கி 2018 வரையிலும் ரணில் - மைத்திரி அரசாங்கம் யாப்புருவாக்க முயற்சி ஒன்றில் ஈடுபட்ட போது, தமிழ் மக்கள் மத்தியில் இருந்து கட்சிகளும் தமிழ் மக்கள் பேரவை போன்ற அமைப்புகளும் பல்வேறு தீர்வு முன்மொழிவுகளை முன்வைத்தன. அதன் பின் கோத்தாபய ஜனாதிபதியாக வந்ததும், ஒரு நிபுணர் குழுவை உருவாக்கினார். அந்த நிபுணர் குழுவின் முன்பும் தமிழ்க் கட்சிகள் தீர்வு முன் மொழிவுகளை, யோசனைகளை முன் வைத்தன.

2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின் நிலை மாறுகால நீதிக்கான ஐநாவின் முப்பதின் கீழ் ஒன்று தீர்மானத்தின் அடிப்படையில், கட்டமைப்பு சார் மாற்றங்களை அரசாங்கம் செய்ய வேண்டியிருந்தது. அதன்படி யாப்பை மாற்றி ஒரு புதிய யாப்பை கொண்டு வர வேண்டியிருந்தது. அதற்காக நாடாளுமன்றம் சாசனப் பேரவையாக மாற்றப்பட்டு, புதிய யாப்பை உருவாக்குவதற்காக ஒரு வழிநடத்தல் குழு உருவாக்கப்பட்டு, அதன் கீழ் பல உபகுழுக்கள் உருவாக்கப்பட்டன. அவை அனைத்தும் இணைந்து செயல்பட்டு ஓர் இடைக்கால வரைபை முன் கொண்டு வந்தன. அந்த இடைக்கால வரைபு 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் மைத்திரிபால சிறிசேன அதைக் குழப்பியடித்தார். அதாவது நிலை மாறு கால நீதியின் பெற்றோரில் ஒருவர் அதனைக் காட்டிக் கொடுத்தார். அதன் பின் அந்த இடைக்கால வரைபு முன்நகரவில்லை.

அந்த இடைக்கால வரைபானது சிங்கள மக்கள் மத்தியிலும் சந்தேகங்களை எழுப்பியது; தமிழ் மக்கள் மத்தியிலும் சந்தேகங்களை எழுப்பியது. அந்த இடைக்கால வரைபில் கூறப்பட்ட தீர்வுக்கு “எக்கிய ராஜ்ய” என்று பெயர் வைக்கப்பட்டது. சிங்கள மக்களுக்கு அது ஒற்றையாட்சிக்கு உட்பட்டது என்று வியாக்கியானம் செய்யப்பட்டது.குறிப்பாக “ஒன்றுபட்ட இலங்கைக்குள்; பிரிக்கப்படாத; பிரிக்கப்பட்ட முடியாத; இலங்கைக்குள்” என்ற வார்த்தைகளை சம்பந்தர் திரும்பத் திரும்ப கூறி வந்தார்.

அதே சமயம் தமிழ் மக்களுக்கு கூறும்போது அது சமஷ்ரிப் பண்புடையது என்று வியாக்கியானம் செய்யப்பட்டது. எனினும் அதையுங்கூட முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை. அன்றைக்கு அந்த யாப்புருவாக்க முயற்சியின் பெற்றோரில் ஒருவராகிய ரணில் விக்கிரமசிங்க இன்றைக்கு ஜனாதிபதியாக இருக்கிறார். அதுவும் நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி. ஆனால் அவர் என்ன கூறுகிறார்? முதலாவதாக, அவர் இனப்பிரச்சினையை வடக்கின் பிரச்சினையாகச் சுருக்குகிறார். இரண்டாவதாக, இப்பொழுது தேவையாக இருப்பது பொருளாதார மீட்சி என்று கூறுகிறார். மூன்றாவதாக, அவர் 13 பிளஸ் கூடத் தரத் தயாரில்லை. போலீஸ் அதிகாரம் இல்லாத 13 மைனஸைத் தரலாம் என்று கூறுகிறார். இப்படியாக நிலைமாறுகால நீதியின் பெற்றோர்களில் மற்றவரும் தலைகீழாகி விட்டார்.

அவர்தான் இப்பொழுது ஜனாதிபதி. அவருக்கு வாக்களிக்க வேண்டாம் ஒரு தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களியுங்கள் என்று முப்பதற்கும் குறையாத சிவில் சமூகங்கள் கேட்கின்றன. ஆனால் அந்த சிவில் சமூகங்களின் கோரிக்கையை நிராகரிப்பதற்கு ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணம் முன்வைக்கப்படுகின்றதா? அந்த ஆவணத்துக்கு குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ கேட்கக்கூடாது என்று வலியுறுத்தப்படுகின்றதா? ஆயின் கடந்த 15 ஆண்டுகளாக அந்த ஆவணம் ஏன் கவனத்தில் எடுக்கப்படவில்லை? நிலைமாறு கால நீதியின் கீழ் உருவாக்கப்பட்ட இடைக்கால வரைபு அந்த ஆவணத்தின் அடிப்படையில் தான் உருவாக்கப்பட்டதா?

இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணம் உருவாக்கப்பட்ட பொழுது சமாதானத்தின் பெற்றோரில் ரணிலும் ஒருவர். பின்னர் 2015ல் நிலைமாறு கால நீதிக்கான ஐநா தீர்மானத்தின்போதும் சமாதானத்தின் பெற்றோரில் ரணிலும் ஒருவர். இப்பொழுது அவர்தான் நிறைவேற்றதிகாரம் உடைய ஜனாதிபதி. எனவே, 2015ஆம் ஆண்டு புதிய யாப்பை உருவாக்கும் முயற்சிகளின்போது அவரிடம் அது வலியுறுத்தப்பட்டதா? இல்லையே? அல்லது எக்கிய ராஜ்ஜிய என்ற இடைக்கால வரைபு ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணத்தின் அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டதா?

ஆயின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த நிலைப்பாட்டு ஆவணத்தின் அடிப்படையில் ஒரு தீர்வுக்கு வரத் தயாராக இருக்கிறாரா? அல்லது அவரை எதிர்க்கும் சஜித் பிரேமதாச அல்லது அனுர அவ்வாறான ஒரு பேச்சுவார்த்தைக்கு தயாரா? ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணத்தை தென்னிலங்கையில் உள்ள எந்த ஒரு பிரதான ஜனாதிபதி வேட்பாளராவது ஏற்றுக் கொள்வார்களா? அப்படி யாராவது ஏற்றுக் கொண்டால் தமிழ்த் தரப்பு அவரோடு பேசப் போகலாமா?

ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணம் என்பது மூன்றாவது தரப்பு ஒன்றின் மத்தியஸ்தத்தோடு உருவாக்கப்பட்டது. இனப் பிரச்சனைக்கு உள்நாட்டில் தீர்வு இல்லை. எல்லா இனப் பிரச்சினைகளும் அனைத்துலகப் பிரச்சினைகள்தான். அவற்றுக்கு அனைத்து லகத் தீர்வுதான் உண்டு, என்ற அடிப்படை உண்மையை வெளிப்படுத்தும் ஆவணங்களில் திம்புக் கோட்பாட்டைப் போல, ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணமும் ஒன்று. அதாவது இனப்பிரச்சினைக்கு ஒரு உள்நாட்டு தீர்வு இல்லை என்பதை நிரூபிக்கும் ஓர் ஆவணம் அது. இப்பொழுதும் ஐநா தீர்மானங்களிலும் அதுதான் நிறுவப்படுகின்றது.

எனவே ஒரு ஜனாதிபதி வேட்பாளர் தமிழ்த் தரப்போடு உடன்பாடு ஒன்றுக்கு வருவாராக இருந்தால் அதில் மூன்றாவது தரப்பு ஒன்று சம்பந்தப்பட வேண்டும். அவ்வாறு மூன்றாவது தரப்பு ஒன்றின் மேற்பார்வையோடு தமிழ்த் தரப்போடு பகிரங்கமாக உடன்பாட்டுக்கு வர எந்த ஒரு தென்னிலங்கை வேட்பாளராவது தயாராக இருக்கிறாரா?

அப்படி யாராவது தயாராக இருந்தால் நிலைமை வேறு. ஆனால் கிளிநொச்சியில் நடந்த மே தினக் கூட்டத்தில் மனோ கணேசன் பேசியது போல, தமிழ் மக்களோடு உடன்பாட்டுக்கு வரும் ஒரு தென்னிலங்கை வேட்பாளர் தமிழ் மக்கள் மத்தியில் நூறு வாக்குகளைப் பெறுவார் என்றால், சிங்கள மக்கள் மத்தியில் அவர் ஆயிரம் வாக்குகளை இழப்பார் என்பதுதான் இலங்கைத் தீவின் இன யதார்த்தமாக இப்பொழுதும் உள்ளது. அதாவது 15 ஆண்டுகளின் பின்னரும் அதுதான் கள யதார்த்தம். அந்த யதார்த்தத்தை நன்கு விளங்கி வைத்துக் கொண்டுதான் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் குறித்த உரையாடல் தொடங்கப்பட்டது.

தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுகின்றவர் இனவாதத்தைத் தூண்டுபவர் அல்ல. அவர் இலங்கைத் தீவின் பல்லினத்தன்மையை வலியுறுத்தும் ஒருவர். இலங்கை தீவின் இனப் பிரச்சினை எனப்படுவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கக் கூறுவது போல வடக்கின் பிரச்சினை அல்ல. அல்லது கோட்டாபய ராஜபக்ஷை கூறியது போல அது பொருளாதாரப் பிரச்சினை அல்ல. மாறாக, அதைவிட ஆழமாக அது இலங்கைத் தீவின் பல்லினச் சூழலை சிங்கள பௌத்த அரசாட்சி ஏற்றுக்கொள்ள மறுத்ததன் விளைவுதான். தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுகின்றவர், இலங்கைத் தீவின் பல்லினச் சூழலை பலப்படுத்த வேண்டும் என்று கேட்பார்.. தமிழ் மக்களை சுயநிர்ணய உரிமை கொண்ட ஒரு தேசம் என்று அவர் வரையறுப்பார். எனவே அந்த அடிப்படையில் தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள்வதற்கு ஜனாதிபதித் தேர்தலை ஒரு மறைமுக பொது வாக்கெடுப்பாக நடத்தலாமா என்று அந்த தெரிவை முன்வைத்துச் செயற்படுகின்றவர்கள் கேட்கிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தமிழ்பொது வேட்பாளர் என்ற தெரிவை ஏற்றுக் கொள்ளவில்லை. அதுதொடர்பாக தனது நிலைப்பாட்டை வடமராட்சியில் தெளிவாக முன் வைத்திருக்கிறார். அது தமிழரசுக் கட்சியின் குறிப்பாக சம்பந்தரின் வழமையான நிலைப்பாடு. அதன்படி தென்னிலங்கையில் உள்ள யாராவது ஒரு பிரதான வேட்பாளரோடு பேரம் பேசுவது என்பதுதான் அதன் சாராம்சம் எனலாம்.

இந்த நிலைப்பாடு பொருத்தமற்றது என்று கருதித்தான் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளர் வேண்டும் என்று கேட்கப்படுகின்றது. தமிழ் சமூகம் அது தொடர்பாக இப்பொழுது ஆழமாக உரையாடத் தொடங்கியிருக்கின்றது. கொழும்பில் உள்ள ஒரு மூத்த தமிழ் ஊடகவியலாளர் கூறியது போல தமிழ் பொது வேட்பாளர் என்ற கருத்துருவம் ஓர் உத்வேகத்தை - momentum - ஏற்படுத்தியிருக்கிறது. அதனால்தான் ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணம் மீண்டும் கையில் எடுக்கப்பட்டதா?

---

## வீணாவின் கவிக்கணை

என்ன பாவம் செய்தேனோ
என ஏங்கும்,
பெற்றோர் இல்லா குழந்தைகளும்,
கொடுமை ஏதும் செய்தேனோ
என்று வருந்தும்,
பிள்ளை இல்லா தம்பதியர்களும்
துவண்டு கிடக்க,
பெற்ற பிள்ளைகளே
முதியோர் இல்லத்தில் சேர்க்கும்
அவலமும் நடந்து கொண்டு தான்
இருக்கின்றது இங்கு,
என்ன சொல்வதென்பதறியேன்,
எல்லோரும் நம் பிள்ளைகள்,
பெரியவர்கள் எல்லாம்
நம்மை பெற்றவர்கள் போல
என்று எண்ணினாலே
குழந்தை காப்பகங்களும்,
முதியோர் இல்லங்களும் குறைந்து
ஏக்கம் தீர வாய்ப்புகள் உண்டு.



கனடிய செய்திகள் Canadian News

# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு வணக்க நிகழ்வு Vaughan இல் நடைபெற்றது




முள்ளிவாய்கால் இனப்படுகொலையின் 15வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் Vaughan தமிழர்களின் பாரம்பரியம் மற்றும் கலாச்சார அமைப்பு (VTHCO) வணக்க நிகழ்வை நடத்தியது. Vellore Community வளாகத்தில் நடைபெற்ற வணக்க நிகழ்வில் தமிழ் தேசிய செயற்பாட்டாளர்கள், சமூக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் பிரமுகர்களின் குடும்பங்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மாலை 6:30 மணிக்கு VTHCO இன் தலைவர் கண்ணன் குமாரசாமி வணக்க நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். சமூகத்தின் ஒற்றுமை மற்றும் நினைவை அடையாளப்படுத்தும் பொது சுடரினை VTHCO இன் நிர்வாக உறுப்பினர்கள் ஏற்றி வைத்தனர். இதைத் தொடர்ந்து கனடிய தேசிய கீதம் இசைக்கப்பட்டு கனடிய தேசியக் கொடியினை சங்கத்தின் மரியாதைக்குரிய மூத்த உறுப்பினரான ஸ்கந்த சிங்கராஜ் ஏற்றினார், அதனைத் தொடர்ந்து தமிழீழ தேசிய கீதம் இசைக்கப்பட்டு தமிழீழத் தேசியக் கொடியை தமிழ் சமூக செயற்பாட்டாளரும் தாயக மண்மீட்பு போரில் வீரச்சாவடைந்த இரண்டு மாவீரர்களின் சகோதரன் தக்கன் தாமோதரம் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து தாயக மண்மீட்பு போரில் வீரச் சாவடைந்த மாவீரர்கள், இலங்கை இந்திய படைகளாலும் இரண்டகர்களாலும் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர்கள், நாட்டுப்பற்றாளர்கள், பொது மக்களை நினைவு கூர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து மண்மீட்பு போரில் வீரச்சாவடைந்த வீரவேங்கை கப்டன் நிசாரின் சகோதரன் இந்திரலிங்கம் ரஞ்சன் ஈகை சுடரினை ஏற்றி மலர் வணக்க நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து வாண் தமிழ் சங்க உறுப்பினர்கள், தேசிய செயல்பாட்டாளர்கள் பொது மக்களென பலரும் மலர் வணக்கம் செலுத்தினர்.

15 ஆண்டுகளுக்கு முன்பு முள்ளிவாய்க்கால் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி மக்களின் பல அரிய நிழல் படங்கள் திரையில் காட்டப்பட்டதோடு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் நேரடிச் சாட்சியும், தமிழீழ அரசியல்துறை கனடாவின் பொறுப்பாளருமாகிய பிரபு இந்நிகழ்ச்சியின் முக்கிய நினைவு உரையை நிகழ்த்தினார்.

இறுதிக்கட்ட போரில் உடல் மற்றும் உணர்ச்சி வடுக்களை இன்னும் தாங்கிய பிரபு நிகழ்வின் நோக்கம் குறித்து உணர்ச்சியுடன் பேசினார்.

தாயகத்தில் நடைபெற்ற போர்க்குற்றங்களுக்கான நியாயமான நீதி மற்றும் பொறுப்புக்கூறல் இன்னும் கிடைக்கவில்லை என்பதனையும் சுட்டிக்காட்டியதோடு மற்றும் தமிழருக்கான நீதி கிடைக்க நாம் வாழும் கனேடிய அரசினூடாக ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச் செல்வதற்கான வலுவான வேலைத்திட்டங்களில் மக்களின் பங்களிப்பின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

நினைவேந்தல் என்ற தொனிப்பொருளுக்கு அமைவாக, ஒற்றுமை மற்றும் உயிர்வாழ்வைக் குறிக்கும் அடையாள உயிர் காத்த உணவான முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலையின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட உயிர் காத்த உணவாக இந்த உணவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த உணவைப் பகிர்வது, பங்கேற்பாளர்களிடையே ஒற்றுமை மற்றும் நினைவூட்டலின் சக்திவாய்ந்த செயலாகும்.

VTHCO இன் செயலாளர் சுகனியா சின்னத்தம்பி அவர்கள் நன்றியுரையாற்றினார்.

முள்ளிவாய்க்காலில் பாதிக்கப்பட்டவர்களின் நினைவுகளை உயிருடன் வைத்திருப்பதில் சமூகத்தின் கூட்டு முயற்சிகளை அங்கீகரித்து, பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் அவர்களின் வருகை,கடமை மற்றும் ஆதரவிற்காக நன்றியைத் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலைக்கு எதிராக புலம்பெயர் தமிழர்கள் Vaughan பண்பாட்டு அமைப்பு எப்பொழுதும் உறுதியாக நின்று இந்த அட்டூழியங்களுக்கு காரணமான இலங்கை அரசைக் கண்டிக்கின்றது. இந்த நினைவேந்தல் நிகழ்வு கடந்த காலத்தை நினைவுபடுத்தும் வகையில் அமைந்தது மற்றும் நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கான தற்போதைய தேடலை கோடிட்டுக் காட்டியது.

புலம் பெயர் நாட்டில் உள்ள தமிழ் சமூகத்தை ஒன்றிணைத்து, அவர்களினால் பகிரப்பட்ட வரலாற்றையும், முள்ளிவாய்க்கால் துயர சம்பவங்களை ஒருபோதும் மறக்க முடியாது என்பதையும் உறுதிப்படுத்தி அதன் அர்ப்பணிப்பையும் வலுப்படுத்தியது.

-நன்றி-
வோன் தமிழ் பண்பாட்டு அமைப்பு





MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# சுமந்திரனின் திடீர் தேசியம் கரையேறுமா?

## - கட்டுரையாளர்: வி.எஸ். சிவகரன் -



**தே**சியம் என்பது இனம், மொழி, பண்பாடு - நாகரிகம், வாழ்வியல் முறைமை, வரலாற்றுத் தொடர்ச்சியை மரபு வழியாக பின்பற்றும் நடைமுறை ஒழுங்கு, அதன் தொன்மம், மரபுரிமையைப் பேணிக் காக்கும் கூட்டுப்பொறுப்பு என பல நிலையியல் இருப்பு செயல்முறை வழித்தோன்றல்கள் யதார்த்த உணர்வுகளுடன் மேலிடை கொள்வதாகும். அதுவே இருப்பியல் நிலையியல் கோட்பாட்டை நிலைநிறுத்தும் மாறலி அற்ற மரபு நிலையாகும். இது அடிப்படைக் கோட்பாட்டுச் சித்தாந்த நகர்வியல் போக்காகும்.

இத்தேசக் கோட்பாட்டை கட்டமைப்பதற்கு மொழி, பண்பாட்டியல் ஒழுங்கு முறைமை, ஒருங்கிணைந்த வரையறுக்கப்பட்ட நிர்ணய எல்லை, நிர்வாக முறைமை, உணர்வியல் கோட்பாடு, மரபுசார் பொருளாதாரம், உற்பத்தியாக்கம், தன்னாட்சி முறைமை, சுயநிர்ணய இருப்பிற்கான சுயமரியாதை கோட்பாடு என நின்று நிலைக்கக்கூடிய, வலுக்குன்றா, நிர்ணய நிலையை வலுவேறாக்கல் கடந்து, எக்காலமும் நிலைபேண்தகு உறுதித் தன்மையை உருக்குலையாமல் வலுக்குன்றாமல் கட்டமைப்பை நிலை தகு ஒழுங்கில் வலிமையோடு வல்லாளுமை இருப்புடையதாக்கி, தொலைநோக்கு சித்தாந்தத் துவத்தை ஒருமுகப்படுத்தி, வல்லாண்மையின் நிலையை நிறையாண்மைக்குட்படுத்துவதே தேசத்து தேசியம்.

இதில் சற்று வலிமையாக, எமது மண்ணில் எம்மை நாமே ஆளும் நிலையை தோற்றுவித்து, தாயகத்து உணர்வில் தமிழ்த்தேசியத்தை புகுத்தி, தன்னாட்சியை நிறுவி சுயநிர்ணய உரிமையை நமக்காக நாமே உருவாக்கிக் கொள்ளும் வலிமையான இரு கருத்து நிலையற்ற செயற்பாட்டு மைய வாதம் கொண்ட சமத்துவ சமநீதி க்குட்பட்ட வாழ்வியல் உணர்வை கட்டமைப்பதே தமிழ் தேசிய அடிப்படை மரபியல்பு நிலைப்பாடாகும். இதையே புலிகளும் பின்பற்றினார்கள். இதில் சில தேசிய பல்வகைமை மாறுபட்ட நிலைகளும் உண்டு.

ஆகவே, தமிழ்த் தேசியம் என்றால் என்ன, புலிகளை ஆதரித்தால் அவர்கள் தமிழ்த் தேசியவாதிகள், மாற்றுக் கருத்துடையோர் துரோகிகள் என்றும் எழுதப்படாத பொது விதி இங்கு உண்டு. அவரவர் இருப்பு நிலையை உணர்ந்தே தமிழ் தேசிய வாத வரைவிலக்கணமும் இருப்பியலாளர்களின் நகர்வுகளை மையப்படுத்தியே கட்டமைக்கப்படுகிறது. இதற்கு எழும் வாழ்வொழுங்கு நடைமுறையும் பெரும் செல்வாக்கு செலுத்துகின்றன.

இவை மாறுபட்ட காழ்ப்புணர்வு கருத்தியல் தோற்றமும் உண்டு.

இவை காலத்தால் நின்று நிதானமாக நிலைத்து நிமிர்ந்து எழுந்து நிதானிக்க கூடிய ஏது நிலைகளை ஒருமித்த கருத்துடையவர்களை ஒப்புவித்து வெளிப்படுத்தும் ஓர் யுக்தி ஆகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் திடீர் தமிழ்த் தேசியவாதம் என்பது பலரை வியக்க வைத்துள்ளது.

சிலரை விமர்சிக்க வைத்துள்ளது. கடந்த 14 ஆண்டுகளாக எதையெல்லாம் கேள்விக்கு உட்படுத்தி எதிர் விவாதம் செய்தாரோ அதற்கு நேர்மாறாக தூய தமிழ் தேசியம் பேசும் நிலையை தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவ தோல்வி கற்றுக் கொடுத்திருக்கிறது.

தமிழ் மக்களின் நாடித்துடிப்பை எண்ணத்து உணர்வுகளையும் புரிந்து கொள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு 14 ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கிறது என்பது மிக நீண்ட காலமே.

அரசியல் என்பது காலத்துக்கு காலம் மக்களின் அடிப்படை உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அதற்கு ஏற்ற வகையிலே நகர்வியல் போக்கு கோட்பாட்டு சித்தாந்தத்திற்கு குறை ஏற்படாத வகையில், நின்று நிதானமாக சமயோசிதமான அணுகுமுறையுடன் நகர்த்து வோர்களையே தேர்தல் அரசியல் கடந்தும் இருப்பை நிலை நிறுத்த முடியும் என்பதே வகுக்கப்படாத நடப்பு விதி.

இதை சுமந்திரன் புரிந்து கொள்ளாமல் நகர்ந்ததே தோல்விக்கு அடிப்படை காரணமாக இருக்கலாம். யதார்த்த வெளிப்படைத்தன்மையும் பல சந்தர்ப்பத்தில் எதிராக மாறுவதுண்டு. யாவகராயினும் நா காக்க.

அறிவு, ஆளுமை, ஆற்றல், வல்லமை, மொழிப்புலமை, தர்க்கவியல் நுட்பம், சட்டப் புலமை, இராஜதந்திர - இராஜிக அணுகுமுறை, வெளிப்படைத்தன்மை, பேச்சாற்றல் - இவை எல்லாம் இருந்தும் தமிழ் மக்களின் இதயத்தால் நேசிக்க கூடியவராக இருக்கவில்லை. இன விடுதலைக்குப் போராடிய இனம் தனது வலி சுமந்தவர்களையும் அதை உணர்ந்து புரிந்து கொண்டவர்களையும் தான் தலைவர்களாக அழகு பார்க்கும்.



சுமந்திரனை அரசியலுக்கு அழைத்து வந்த சம்பந்தன் அவர்களும் ஒரு வலிமையான தூய தமிழ்த்தேசியவாதி இல்லை. சுமந்திரனின் அரசியல் அனுபவமின்றிய எல்லை மீறிய வார்த்தைகளை உடனுக்குடன் கட்டுப்படுத்தி, வழிபடுத்தி இருந்தால் சுமந்திரனுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளாது, புலிகளையும் மனித உரிமைகள் விவகாரத்தில் விசாரிக்க வேண்டும் எனவும், சர்வதேச விசாரணை முடிந்து விட்டது எனவும், படிப் பறிவில்லாதவர்களும் வேலையில்லாதவர்களும்தான் வடகிழக்கில் போராடினர் என்றும், முஸ்லிம்கள் வெளியேற்றம் என்பது புலிகளின் இனச்சுத்திகரிப்பு என்றும் அவ்வப்போது விளித்து வந்ததன் விளைவே இந்த நிலைமை.

தமிழ் தேசிய நிகழ்வுகளில் பெரிய அக்கறை செலுத்த தவறியவையும் இதில் அடங்கலாம். அவரது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளும் இருக்கலாம். சந்தர்ப்ப சூழ்நிலைகளும் இருக்கலாம். அது அவரவர் மன பிரதிபலிப்பு.



ஆனால் தமிழ்த் தேசியத்திற்கு சுமந்திரன் மீது கூட்டுக் கோபம் உண்டு. துரோகி பட்டம் என்பது மிக மலிவாக ஏற்புடையது. மக்கள் மனங்களில் பதியக்கூடியது. “எப்பொருள் யார், யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு” எனும் வள்ளுவ வாக்கை உணர்வுச் சிந்தனை ஒருபோதும் அறிவார்ந்து நோக்குவதில்லை.

புலிகளின் தியாகத்தை மலினப் படுத்துபவர்களை தமிழ்த்தேசிய அரசியல் ஒருபோதும் இடமளிப்பதில்லை. அதனால்தான் விக்னேஸ்வரன் ஆயுதப் போராட்டம் பற்றி தவறான புரிதலுடன் வடக்கு மாகாண சபை முதல்வராகிய போதும், ஒரு வருட காலத்தில் மக்களின் நாடித்துடிப்பை உணர்ந்தவராக தமிழ்த் தேசிய அரசியலை முதன்மைப்படுத்தி நகரத் தொடங்கினர்.

அதனால்தான் விமர்சனங்கள் கடந்தும், சிங்கள சம்பந்தி நிலையை மறந்தும், தமிழ் மக்கள் மிகப்பெரிய ஆதரவு வழங்கினார்கள். அதை அவர் தக்க வைக்க முடியாமல் தடுமாற வைத்து விட்டார்.

புலிகளுக்கு எதிராக இருந்து, பல்வேறு விதமான காட்டிக்கொடுப்பு, கூட்டிக்கொடுப்பு, கடத்தல் என ஒட்டுக் குழுக்கள் பல. புலிகளின் துரோகிகள் பட்டியலில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற கட்சிகளை புலிகள் ஏற்றுக் கொண்டதன் ஊடாக எருசலேம் நகரத்து புனித நீரும் காசியின் புண்ணிய தீர்த்தமும் தெளித்து துரோகி பட்டியலில் இருந்து தியாகி நிலைக்கு பாவம் விமோசனம் கொடுத்து உயர்த்தப்பட்டமை போல் உணர்ந்து கொண்டனர்.

அதனால்தான் இன்னும் அவர்கள் அரசியல் நகர்கிறது. இவர்களது கடந்த காலம் இலகுவில் எவரும் மறந்துவிட முடியாத கறை படிந்தவை. யுத்தத்தை நிறுத்தினால் புலிகளுக்கு ஒட்சிசன் கொடுத்த மாதிரி என்ற சித்தார்த்தன் கூட்டமைப்பில் சேர்ந்ததால் அவரும் தியாகி ஆகிவிட்டார்.

ஆகவே சுமந்திரன் தனது கடந்த கால தவறுகளை உணர்ந்து இதில் இருந்து தெளிந்து எழுந்தால் தமிழ் தேசியம் தனதாக்கிக் கொள்ளும் நிலை ஏற்படலாம். இதில் பட்டறிவு அனுபவத்தால் வருகின்ற உணர்வுத்தெளிவு, அரசியல் கடந்து, இலட்சிய இருப்பிற்கான செல்நெறியை தீர்மானிக்க வல்லதாக அமைய வேண்டும்.

தனது இன்றைய சக பாடிகளையும் விமர்சனத்திற்கு உட்படுத்த வேண்டும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களினுடைய உணர்வுகளை நன்கு புரிந்து கொண்டு அவர்களின் மீள் வாழ்வுக்கும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கவும் முள்ளிவாய்க்கால் திட்டமிட்ட இனப்படுகொலை என சான்று படுத்தவும் தனது சட்ட புலமையை உபயோகப்படுத்த வேண்டும்.

வடக்கு - கிழக்கு எங்கும் பல்வேறு வழக்குகள் கட்டணம் பெறாமல் நீதிமன்றங்களில் முன்னிலை யாகுவது போல் தமிழர்களின் இலட்சிய வேட்கையான தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணய உரிமை - இக்கோட்பாட்டை நடைமுறை சாத்தியமாக்க இதய சுத்தியோடு உளப்பூர்வமாக பணியாற்ற வேண்டும் என்பதே சுமந்திரனை எதிர்ப்பவர்கள் கூட எதிர்பார்க்கும் விடயமாகும்.

அவ்வாறு தமிழ் தேசிய எழுச்சி நிலையில் தொடர்ந்தால் இன்றைய வாக்கு வணிகர்களின் தமிழ் தேசியவாத இருப்பு என்பது கேள்விக்குறியாக மாறக்கூடிய நிலை தோன்றலாம். ஆகவே சுமந்திரன் தன்னை ஒரு தூய தமிழ் தேசியவாதியாக நிலை நிறுத்த வேண்டிய கால நிர்பந்தத்துக்கு நிர்கதியாக்கப்பட்டுள்ளார். என உணர முடிகிறது.

ஆகவே நிலை தடுமாறாமல் இப்பயணத்தில் அவர் தொடர்ந்து பயணிக்க வேண்டும். அப்போதுதான் காலத்தால் உள்ளீர்த்துக் கொள்ளும் நிலை ஏற்படலாம்.

காலம் எந்த இடை வெளியையும் இதுவரை நிரப்பாமல் விட்டதில்லை. எனவே சுமந்திரனின் செயலே முடிவுறுத்தும் காலத்தால் கரை யேற்றமா? அல்லது கறி வேப்பிலையா?? என்பதை.

**தொகுப்பு: எஸ்.ஆர்.லெம்பேட்**

# UTHAYAN INTERNATIONAL AWARD FESTIVAL - 2024

## உதயன் சர்வதேச விருது விழா 2024

உதயன்
விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards 2024

**MAY 26th 2024**
**Sunday, 6.00 PM**

## THIS YEAR'S AWARDS ARE...
## இவ்வருடத்திற்குரிய விருதுகள்...

UTHAYAN LITERARY AND ARTISTIC EXUBERANCE AWARD
UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD- ONTARIO
UTHAYAN LEADERSHIP AWARD
UTHAYAN YOUTH ICON AWARD- ONTARIO
UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD-TAMIL NADU
UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD-MALAYSIA
UTHAYAN SPECIAL AWARD – EUROPE


**The Estate Banquet Hall and Event Centre**
**430 Nugget Avenue, Scarborough, Ontario**

ஓம் சக்தி துணை

# ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம்

## சோமசுந்தரேஸ்வரர் தேவஸ்தானம்

585 MIDDLEFIELD RD, UNIT 1 & 2, TORONTO (MIDDLEFIELD & FINCH)



அம்மன் TEL: 416 535-6560

## பிரம்மோற்சவ பெருவிழா 2024

### அம்மன் திருவிழா

(09.08.2024 வெள்ளி முதல் 28.08.2024 புதன் வரை)

திருவிழா நிகழ்ச்சி நிரல்



| | |
|---|---|
| 09.08.2024 | வெள்ளி நண்பகல் 11மணிக்கு கொடியேற்றம் |
| 16.08.2024 | வரலட்சுமி பூஜை - மாலை 7:00 மணிக்கு |
| 18.08.2024 | மாம்பழத் திருவிழா - ஞாயிறு காலை 10 மணிக்கு<br>சதுர் சஷ்டி உபசாரபூஜை - மாலை 7:00 மணிக்கு (64 உபசாரம்) |
| 20.08.2024 | மஞ்சத் திருவிழா - செவ்வாய் மாலை 8 மணிக்கு |
| 22.08.2024 | வேட்டை திருவிழா - வியாழன் மாலை 6 மணிக்கு |
| 23.08.2024 | சப்பரத் திருவிழா - வெள்ளி மாலை 8 மணிக்கு |
| 24.08.2024 | தேர்த்திருவிழா - சனி காலை 11:30 மணிக்கு |
| 25.08.2024 | தீர்த்தத் திருவிழா - ஞாயிறு காலை 11 மணிக்கு<br>கொடியிறக்கம் - மாலை 8 மணிக்கு |
| 26.08.2024 | பிராயச்சித்தம் அபிஷேகம் - திங்கள் காலை 9 மணிக்கு<br>திருக்கல்யாண உற்சவம் - திங்கள் மாலை 8 மணிக்கு |
| 27.08.2024 | பூங்காவனம் - செவ்வாய் மாலை 8 மணிக்கு |
| 28.08.2024 | வயிரவர் மடை புதன் மாலை 7 மணிக்கு |




என்றும் இறைபணியில்
ஆலய தர்ம கர்த்தா

அனைவரும் வருக – அன்னையின் அருள் பெருக

ஓம் சக்தி துணை

# ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம்

## சோமசுந்தரேஸ்வரர் தேவஸ்தானம்

585 MIDDLEFIELD RD, UNIT 1 & 2, TORONTO (MIDDLEFIELD & FINCH) TEL: 416 535-6560

பிரம்மோத்ஸவ (துவஜாரோஹண) விஞ்ஞாபனம்

சிவன்

## பிரம்மோற்சவ பெருவிழா 2024

### சிவன் திருவிழா

(31.05.2024 வெள்ளி முதல் 11.06.2024 செவ்வாய் வரை)

திருவிழா நிகழ்ச்சி நிரல்



| | |
|---|---|
| 31.05.2024 | கொடியேற்றம் - வெள்ளி நண்பகல் 11மணிக்கு |
| 06.06.2024 | வேட்டை திருவிழா - வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு |
| 07.06.2024 | சப்பரத் திருவிழா - வெள்ளிக்கிழமை மாலை 8 மணிக்கு |
| 08.06.2024 | தேர் திருவிழா - சனிக்கிழமை காலை 11:30 |
| 09.06.2024 | தீர்த்தத் திருவிழா - ஞாயிறு காலை 11 மணிக்கு |
| 10.06.2024 | திருக்கல்யாணம் - பூங்காவனத் திருவிழா<br>திங்கள் இரவு 7:00 மணிக்கு |
| 11.06.2024 | வயிரவர் மடை - செவ்வாய் மாலை 7 மணிக்கு |




என்றும் இறைபணியில்
ஆலய தர்ம கர்த்தா

அனைவரும் வருக – அன்னையின் அருள் பெருக

டுறம் தமிழ் ஒன்றியம் "Evolving Elder Care In-Home Support"வளரும் முதியோர் பராமரிப்பு வீட்டில் -ஆதரவளித்தல் எனும் ,முதியவர்களுக்கான தன்னார்வ அடிப்படையிலான சேவைகளை வழங்குகிறது.

## இலவச சேவை

- உணவு விநியோகம்,
- தன்னார்லர்கள் மூலம் போக்குவரத்து சேவை: மருத்துவமனை நியமனங்கள், மருத்துவரைபார்வையிடல், மளிகைப்பொருள் கொள்வனவு நிலையங்கள் போன்றவை
- முதியோருக்கான சிறு வீட்டு பராமரிப்பு
- நண்பர்களாக வீட்டுக்கு வருகை தருதல் - நட்பு உரையாடல்கள், மற்றும் திறன் வளர்ப்புஉதவிகள். (Zoom, YouTube, google search...)
- போக்குவரத்து சேவை - வழிபாட்டு தலங்கள், Mall, உணவு விடுதிகள் போன்றவை.

## எங்களின் தொடர்புக்கு

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

தொடர்பு எண்:

- (647) 968-9549
- (647) 286-9549

மேலும் தகவலுக்கு எங்கள் இணையதளத்தைப் பார்க்கவும்:

dtaseniorsinhomesupport.ca

# டுறம் தமிழ் ஒன்றியம்

## வளரும் முதியோர் பராமரிப்பு வீட்டில் -ஆதரவளித்தல்




எட்டு நகராட்சிகளுக்கு இலவச சேவை வழங்கபபடுகின்றது

PICKERING, AJAX,WHITBY, OSHAWA CLARINGTON, BROCK, UXBRIDGE ,SCUGOG,

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada

## வளரும் முதியோர் பராமரிப்பு - வீட்டில் ஆதரவளித்தல்

## இலவச உணவு விநியோக சேவை

அசைவம் அல்லது சைவ விருப்பத்தை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்

- சூடான, புதிதாகத் தயாரிக்கப்பட்ட உணவு
- எங்களின் தன்னார்வலர்களால் சரியான நேரத்தில் உணவு விநியோகிக்கப்படுகிறது

எட்டு நகராட்சிகளுக்கு இலவச சேவைவழங்கப்படுகின்றது

Pickering, Ajax, Whitby, Oshawa, Clarington,Brock, Uxbridge, Scugog





மேலதிக விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

தொடர்பு எண்:

(647) 968-9549

(647) 286-9549

டெலிவரி தேதிக்கு குறைந்தபட்சம் 5 நாட்களுக்கு முன்னதாக உங்கள் ஆர்டரைச் செய்யுங்கள்.

தகுதி: பாதிக்கப்படக்கூடிய மற்றும் குறைந்த வருமானம் கொண்ட முதியவர்கள்: வயது 55 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்

dtaseniorsinhomesupport.ca

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada

## Durham Tamil Association Evolving Elder Care -in Home Support for seniors

### Free Training

- Free Training and a certificate of completion from Computek College in Ajax
- 50 volunteer hours placement

### Benefits

- Free Vulnerable Check
- Unlock valuable life skills with Free Standard CPR and First Aid Training
- Volunteer Travel Expense $0.58/km
- Join us to make a postive impact on seniors lives while gaining valuable skills and exprences.

### Contact US


Office Hours: Monday through Friday 9:00am - 5:00PM

Contact Number:

- (647) 968-9549
- (647) 286-9549

Durham Tamil Association

66 Harwood Ave, S.Ajax L1S 2H6




### Serving Eight Municipalities

- Brock
- Uxbridge
- Scugog
- Pickering
- Oshawa
- Clarington
- Ajax
- Whitby

For More Information Visit the website: dtaseniorsinhomesupport.ca

## Volunteers Needed!

## தன்னலவாளர்கள் தேவை!




**Join our volunteer team and gain more than just experience – unlock valuable life skills while making a positive impact on seniors' lives in Durham!**

**Volunteer Gala : Twice a Year!**

- **Summer Gala 2024**
- **Winter Gala 2024**
- **Spring Gala 2025**
- **September Gala 2025**

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada

# வாய்ப்பாட்டு அரங்கேற்ற அழைப்பிதழ்!



இளங்கலைஞர் மன்றத்தின் குருவும் நிறுவனருமான
சங்கீத பூஷணம். இன்னிசை வேந்தர்
**பொன் சுந்தரலிங்கம்** அவர்களின்
மாணவியும் எமது அன்புப் புதல்வியுமாகிய

## லிலானி தங்கவடிவேலு

அவர்களது வாய்ப்பாட்டு அரங்கேற்றம்
எதிர்வரும் 01-06-2024 சனிக்கிழமையன்று
மாலை 4.00 மணிக்கு
1120 Tapscott Road, Unit-3, Scarborough, M1X 1S9
என்னும் விலாசத்தில் அமைந்துள்ள
தமிழிசைக் கலாமன்ற மண்டபத்தில்
நடைபெறவுள்ளது.



மேற்படி எமது செல்வியின் வாய்ப்பாட்டு அரங்கேற்றத்திற்கு
வருகை தந்து அவரை ஆசிர்வதித்தும்
சிறப்பித்தும் ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்!



இங்ஙனம், பெற்றோர்
திரு.திருமதி. தங்கவடிவேலு தங்கராணி தம்பதி
(416) 736-0563

# இராணுவ மயமாகி வரும் இலங்கையின் எதிர்க்கட்சி

**"சஜித் பிரேமதாச தலைமையிலான இலங்கையின் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் ஏற்கனவே போர்க்குற்றவாளியென குற்றம்சாட்டப்படும் முன்னாள் இராணுவத்தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி.யாக உள்ள நிலையில் கடந்த இரு மாதங்களுக்குள் மட்டும் முன்னாள் இராணுவத் தளபதிகளான ஓய்வுபெற்ற ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க, லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க, கடற்படையின் 14 ஆவது கடற்படைத் தளபதியாக இருந்து ஓய்வு பெற்ற அட்மிரல் தயா சந்தகிரி, முன்னாள் சிறப்பு அதிரடிப்படை தளபதியான ஓய்வு பெற்ற நிமல் லெவ்கே ஆகியோரும் ஓய்வுபெற்ற 11 மேஜர் ஜெனரல்களும் ஒரு பிரிகேடியரும் இணைக்கப்பட்டு உயர்பதவிகளும் வழங்கப்பட்டுள்ளதுடன் தமது ஆட்சியில் இராணுவத்திற்கே முன்னுரிமையெனவும் அறிவிப்பு"**

**- கே. பாலா**



மலையக தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் பங்காளிகளாகவுள்ள சஜித் பிரேமதாச தலைமையிலான இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் நெருங்க, நெருங்க இராணுவமயமாகி வருவதுடன் தமது அரசாட்சியில் இராணுவத்திற்கு முன்னுரிமையளிக்கப்படுமென அக்கட்சியின் தலைவர் அறிவித்திருப்பதும் இந்த தேர்தல்களில் இக்கட்சி வெற்றிபெற்று விட்டால் அது இலங்கையில் மீண்டுமொரு இராணுவ ஆட்சிக்கு வழிவகுத்து விடுமோ என்ற அச்சத்தையும் சந்தேகத்தையும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு குறிப்பாக தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அப்போது அக்கட்சியின் பிரதித்தலைவராக இருந்த சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதில் ஏற்பட்ட போட்டியில் கட்சியின் பெரும்பாலானவர்கள் சஜித் பிரேமதாசாவின் பக்கம் நின்றதால் ரணில் விக்கிரமசிங்க சஜித் பிரேமதாசாவுக்கு விட்டுக்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனையடுத்த அந்த ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவை எதிர்த்து சஜித் பிரேமதாச போட்டியிட்ட நிலையில் எதிர்பார்த்தது போலவே தோல்வியடைந்தார்.

இதனையடுத்து ஜனாதிபதி பதவி தான் கிடைக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியையாவது கைப்பற்றுவோம் என நினைத்த சஜித் பிரேமதாச அதற்கான பல முயற்சிகளை எடுத்தபோதும் அவை எதுவும் ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுபடாத நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியை பிளவுபடுத்தி புதிய கட்சியை ஒன்றை ஆரம்பித்து 2020 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தலில் போட்டியிட முடிவெடுத்தார்.

2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவிருந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அக்குறுகிய காலப் பகுதிக்குள் புதிய அரசியல் கட்சியொன்றை பதிவு செய்ய முடியாத நிலையால் சஜித் பிரேமதாச ஏற்கனவே தேர்தல்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருந்த "அபே ஜாதிக பெரமுன" வைத் (எமது மக்கள் முன்னணி) தனது புதிய கட்சியாக தெரிவு செய்தார். இந்தக்கட்சியைத்தான் பின்னர் "ஐக்கிய மக்கள் சக்தி" என்று பெயர் மாற்றி தன்னை கட்சியின் தலைவராகவும் ரஞ்சித் மத்தும பண்டாரவை பொதுச் செயலாளராகவும் அறிவித்து கட்சியின் சின்னமாக தொலைபேசி சின்னத்தையும் பெற்றுக்கொண்டார்.

2020 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தி 54 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. இந்தக்கட்சியில் சிறுபான்மையினக் கட்சிகளான மனோகணேசன் தலைமையிலான மலையகத் தலைவர்களான இராதாகிருஷ்ணன், பழனி திகாம்பரம் ஆகியோரைக்கொண்ட தமிழ் முற்போக்குக் கூட்டணி, ரவூப் ஹக்கீமை தலைவராகக்கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத் பதியுதீனைத் தலைவராக கொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளும் பங்காளிக் கட்சிகளாகவுள்ளன.

இவ்வாறு இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியாக முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மகனும் ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் பிரதித்தலைவருமான சஜித் பிரேமதாசவை தலைவராகவும் தமிழ், முஸ்லிம் கட்சிகளைப் பங்காளிக் கட்சிகளாகவும் கொண்ட இந்தக்கட்சி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளை கணிசமானளவில் பெற்று வெற்றி பெறக்கூடிய வாய்ப்புக்களை கொண்டிருப்பதாக எதிர்வு கூறப்பட்டு வரும் நிலையில் தான் கட்சி திடீரென இராணுவ மயப்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கை இராணுவத்தின் தளபதியாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இருந்த போது அவரின் நம்பிக்கைக்குரியவராக இருந்தவரும் சரத் பொன்சேகா இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது அவரின் தனிப்பட்ட செயலாளராகவும் இருந்தவரான இராணுவ மேஜர் சேனக டி சில்வாவை உரிமையாளராகக் கொண்ட தேர்தல்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருந்த "அபே ஜாதிக பெரமுன" (எமது மக்கள் முன்னணி) என்ற கட்சியைத்தான் சஜித் பிரேமதாச தன் வசமாக்கி "ஐக்கிய மக்கள் சக்தி"யாக பெயர்மாற்றி அதன் வாழ் நாள் உறுப்பினராக ஓய்வு பெற்ற இராணுவ மேஜரான சேனக டி.சில்வாவையும் அவரது மனைவியான டயான கமகேயையும் நியமித்து அதில் டயான கமகேயை தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றத்திற்கும் கொண்டு வந்தார்.

அது மட்டுமன்றி இலங்கை இராணுவத்தின் தளபதியாகவிருந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவையும் தனது கட்சி வேட்பாளராக்கி அவரையும் பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்ததுடன் தனது அரசு அமைந்தால் அதில் பாதுகாப்பு அமைச்சராக சரத் பொன்சேகா நியமிக்கப்படுவார் என்ற உத்தரவாதத்தையும் சஜித் பிரேமதாச பொது மேடைகளில் வழங்கியிருந்தார்.

ஏற்கனவே இராணுவ மேஜரை வாழ் நாள் உறுப்பினராகவும் இராணுவத்தளபதியை பாராளுமன்ற உறுப்பினராகவும் கொண்ட இந்தக் கட்சியில்தான் தற்போது முன்னாள் இராணுவ, கடற்படைத் தளபதிகள் படு தீவிரமாக இணைக்கப்பட்டு அவர்களுக்கு கட்சியில் உயர் பதவிகளும் வழங்கப்பட்டு வருவதுடன் நாட்டில் அரசொன்றை அமைக்க இராணுவத்திலுள்ளவர்கள் தமது கட்சியில் இணைய வேண்டும் என்ற அழைப்பையும் எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இதுவரையில் முன்னாள் இராணுவத் தளபதி ஓய்வுபெற்ற ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க. இராணுவத்தின் முன்னாள் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க மற்றும் ஓய்வு பெற்றவர்களான மேஜர் ஜெனரல் சமன் லியனகே, மேஜர் ஜெனரல் அருண வன்னியாராச்சி, மேஜர் ஜெனரல் ஹேரத், மேஜர் ஜெனரல் அதுல கொடிப்பிலி, மேஜர் ஜெனரல் பிரியந்த நாபானகொட, மேஜர் ஜெனரல் வசந்த ஜயசூரிய, மேஜர் ஜெனரல் எச்.எம்.எம்.பி ஹேரத், மேஜர் ஜெனரல் நிஷங்க ரணவன, மேஜர் ஜெனரல் சுமித் அத்தபத்து மேஜர் ஜெனரல் உபுல் விதானகே, மேஜர் ஜெனரல் சத்தியப்பிரிய லியனகே, பிரிகேடியர் மஞ்சுள விஜேசிங்க ஆகிய இராணுவத்தின் முன்னாள் தளபதிகள் இணைந்துள்ளனர்.

இவர்கள் மட்டுமன்றி இலங்கை கடற்படையின் 14 ஆவது கடற்படைத் தளபதியாக இருந்து ஓய்வு பெற்ற அட்மிரல் தயா சந்தகிரி, முன்னாள் சிறப்பு அதிரடிப்படை தளபதியான ஓய்வு பெற்ற நிமல் லெவ்கே, ஆகியோரும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளதுடன் இவர்கள் அனைவருக்கும்கட்சியில் பல்வேறு பதவி நிலைகளும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் இராணுவத்தில் தனக்கு எதிராக செயற்பட்டவர்களும் கட்சியில் உள்வாங்கப்பட்டு உயர் பதவிகள் வழங்கப்பட்டதால் அதிருப்தியடைந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கட்சித்தலைவரான சஜித் பிரேமதாசாவுடன் முரண்பட்ட தால் சரத் பொன்சேகா கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட நிலையில் அது தொடர்பிலான வழக்கு நீதிமன்றத்தில் நடந்து வருகின்றது.

இவ்வாறு பிரதான எதிர்க்கட்சி இராணுவ மயப்படுத்தப்பட்டு வரும் நிலையில் அரசின் திருட்டு, ஊழல், மோசடி, கொள்ளை மற்றும் தேசிய சொத்துக்கள் மற்றும் வளங்களை வீணடிப்பதை இல்லாதொழிக்க இராணுவ வீரர்கள் தலையிட வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்பும் மனிதாபிமானப் பணியில் பங்காளராகுமாறு இராணுவ வீரர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன். அதேநேரம் 88/89 புலிகளுடனான யுத்தத்தின் போது காணாமல் ஆக்கப்பட்ட, ஆதரவற்ற குடும்பங்களுக்கு விசேட வேலைத்திட்டமொன்றும் எனது அரசில் முன்னெடுக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அறிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சக்தி நடத்திய "தாய்நாட்டின் சுதந்திரத்திற்காக உயிர் தியாகம் செய்த இராணுவ வீரர்களுக்கு நன்றி பாராட்டும் மாநாட்டின்" 6 ஆவது கட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மொனராகலையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் இடம்பெற்ற போதே இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

அது மட்டுமன்றி நாட்டிற்காக சிறந்த சேவையாற்றிய இந்த இராணுவ வீரர்கள் பாதுகாக்கப்படுவார்கள். அவர்களை கவனித்துக் கொள்வோம். நான் பதவியேற்று 48 மணித்தியாலங்களுக்குள் இராணுவ வீரர்களது பொருளாதார மற்றும் சமூக உரிமைகளைப் பாதுகாப்பதற்கு விசேட ஜனாதிபதி செயலணி ஒன்றினை தாபிப்பேன். இராணுவ வீரர்கள் தொடர்பான கட்டளைகள் காலத்திற்கு ஏற்றாற் போல் புதுப்பிக்கப்படும். ரணவிரு சேவா அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட அதிகாரங்களும் ஏற்பாடுகளும் போதுமானதாக இல்லை. இராணுவ வீரர்களின் நலன்புரி செயல்பாடுகளுக்காக தனித்த திணைக்களம் உருவாக்கப்பட்டு, இராணுவ வீரர்களின் பிரச்சினைகளுக்குப் பதில் வழங்கும் நிறுவனமொன்று ஸ்தாபிக்கப்படும் எனவும் சஜித் பிரேமதாச உறுதியளித்துள்ளார்.

மலையக தமிழ், முஸ்லிம் கட்சிகளை பங்காளிகளாக வைத்துக்கொண்டு ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தலில் தனதும் தனது கட்சியின் வெற்றிக்காகவும் வடக்கு, கிழக்கு மற்றும் மலையக தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளையும் எதிர்பார்த்துக் கொண்டு தென்னிலங்கை வாக்குகளை கவர்வதற்காக கட்சியையும் இராணுவ மயப்படுத்தி தனது ஆட்சியில் இராணுவத்திற்கே முன்னுரிமையென அறிவித்துக்கொண்டு இரட்டை வேடம்போடும் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசவையும் அவரது கட்சியையும் வெற்றி பெற வைப்பதா அல்லது தோற்கடிப்பதா என்பதனை தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்



# மன்னார் மாவட்ட கராத்தே சம்மேளன தலைவராக அன்ரனி இன்பராஜ் தெரிவு

- எஸ்.ஆர். லெம்பேட் (20-05-2024)

மன்னார் மாவட்ட கராத்தே சம்மேளன தலைவராக மன்னார் கராத்தே பயிற்சி நிறுவன தலைவர் அன்ரனி இன்பராஜ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

19-05-2024 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் கராத்தேயில் மாகாண மற்றும் மாவட்ட சம்மேளன தலைவர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெற்றது.

மேற்படி தேர்தலில் கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த தெரிவுக்குழுவின் மன்னார் விடத்தல் தீவை சேர்ந்த சீ கான் அன்ரனி இன்பராஜ் மன்னார் மாவட்ட கராத்தே சமமேளன நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# மன்னாரில் கட்டுக்கரை குளத்தின் கீழ் இம்முறை 3 ஆயிரத்து 495 ஏக்கர் சிறுபோக செய்கை முன்னெடுக்க நடவடிக்கை – அரசாங்க அதிபர் தெரிவிப்பு

- எஸ்.ஆர்.லெம்பேட் (20-05-2024)




மன்னார் கட்டுக்கரை குளத்தின் கீழ் புலவு நிலங்களில் முன்னெடுக்கப்படுகின்ற சிறுபோக நெற் செய்கைக்கான ஏற்பாடுகள் தற்போது மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் முதல் கட்ட நீர் விநியோகம் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை திறக்கப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் AND திங்கட்கிழமை 20-05-2024 மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் கட்டுக்கரை குளத்தின் கீழ் புலவு நிலங்களில் முன்னெடுக்கப்படுகின்ற சிறுபோக நெற் செய்கைக்கான ஏற்பாடுகள் தற்போது மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மாவட்டத்தில் மொத்தமாக கால போக பயிர்ச்செய்கை ஆனது 30 ஆயிரத்து 36 ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்கை முன்னெடுக்கப்பட்டது.

அதனடிப்படையில் கடந்த வாரம் இடம்பெற்ற கூட்டத்தில் 12க்கு 1 என்ற அடிப்படையில் 2918 ஏக்கர் கட்டுக்கரை குளத்தின் கீழ் இவ்வருடம் சிறுபோகம் செய்ய தீர்மானிக்கப்பட்டு இருந்தது.

எனினும் தற்போது பெய்து வருகின்ற மழையுடனான காலநிலையை கருத்தில் கொண்டு கடந்த 16ஆம் திகதி (16-05-2024) வாய்க்கால் அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் திணைக்கள தலைவர்களுடன் இடம் பெற்ற கூட்டத்திற்கு அமைவாக 10 இற்கு 1 என்ற அடிப்படையில் (அதாவது 10 ஏக்கர் பெரும்போகம் செய்த ஒரு விவசாயிக்கு 1 ஏக்கர் புலவில் பயிர்ச்செய்கை) இவ்வருடம் சிறு போகம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இவ்வருடம் 3495 ஏக்கர் சிறுபோக செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.ஏற்கனவே திறக்கப்பட்ட புலவுக்கு மேலதிகமாக 6 புலவுகள் திறக்கப்பட்டு சிறு போகத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

முதலாம் கட்ட நீர் திறப்பு எதிர்வரும் 27-05-2024 அன்று சிறு போகத்திற்கு திறந்து விடப்பட உள்ளது.நீர் விநியோக இறுதி திகதி 14-09-2024 என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே கட்டுக்கரை குளத்தின் கீழ் சிறுபோக செய்கை முன்னெடுக்கவுள்ள விவசாயிகள் நீர் திறப்பு திகதி மற்றும் நீர் விநியோக இறுதி திகதி ஆகியவற்றை கருத்தில் கொண்டு சிறுபோக செய்கையை மிக விரைவாக ஆரம்பிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். தற்போது ஒதுக்கப்பட்டுள்ள காணிகளுக்கு காணிகளின் உரிமையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

# மருத்துவர்
## (குறள் வெண்செந்துறை)

மனித வடிவில் வாழும் தெய்வம்
புனிதச் செயலால் பெருமை பெற்றவர்

ஓய்விலா துழைக்கும் ஒப்பிலா மனிதன்
நோய்தனை விரட்டும் நிகரிலாப் புனிதன்

வாழ்விற்கு வழிகாட்டும் வரம்தரும் மன்னன்
வீழ்வோரை மீட்டிடும் வீரமிகு மருத்துவன்

மருத்துவம் இல்லையேல் மனிதர் இல்லை
வருத்தும் நோயினால் வாழ்வு முடியுமே

பசியைப் பாராது போராடல் நோயுடன்
நிசியிலும் நித்திரை துறந்து கடமையில்

மருத்துவ மனைக்குச் சென்று பார்த்தேன்
கருத்துடன் கடமையில் கடவுளைக் கண்டேன்


பனியும் மழையும் பாராப் பணிசெய்து
மனிதம் காக்கும் மகானைப் போற்றுக

கொலைஞன் கொரணா கூத்தாடிய போதிலே
மலைபோல் நின்றே மருத்துவம் செய்தவர்.

உலகில் உன்னதத் தொழிலைச் செய்பவர்
பலரும் போற்றும் பண்பான சேவகர்.

உணவுகள் மறந்து உயிருடன் போராடும்
கணக்கிலா மருத்துவரை காலமெலாம் வாழ்த்துமே!

ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453



# இலங்கைப் பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன் (காப்பியதாசன்)

முனைவர் மு. இளங்கோவன், புதுச்சேரி,இந்தியா






பண்டிதர் கடம்பேசுவரன் அவர்கள் இலங்கையில் சிந்துபுரத்தில் பிறந்து, தொழில்கல்வி பயின்று, தமிழின் மீது கொண்ட பற்றின் காரண-மாக இலக்கிய இலக்கணங்களைக் கற்றுப் பண்டிதராக விளங்கியவர். ஆசிரியர், எழுத்தாளர், செய்தியாளர், கலை ஆர்வலர், நாடகக் கலைஞர், சமூக சேவகர் என்ற பன்முகத் தன்மையுடன் விளங்கியவர். தொல்காப்பியம், நன்னூல் உள்ளிட்ட இலக்கண நூல்களுக்கு உரை எழு-திய பெருமைக்குரியவர். தொல்காப்பியத்தின் மேல் தமக்கிருந்த ஈடுபாட்டின் காரணமாகக் காப்பியதாசன் என்ற புனைபெயரிலும் எழுதியவர்.

பண்டிதர் மயில்வாகனம் நவரத்தினம் கடம்பேசுவரன் அவர்கள் யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, சிந்துபுரத்தில் 1947 திசம்பர் 10 இல் பிறந்தவர். பெற்றோர் பெயர் மயில்வாகனம் நவரத்தினம் (ஆசிரியர்), பாக்கியம் என்பதாகும்.

பண்டிதர் கடம்பேசுவரன் அவர்கள் தமது தொடக்கக் கல்வியை வட்டுக்கோட்டை, சிந்துபுரம் என்னும் ஊரில் அமைந்துள்ள திருநாவுக்கரசு மகா வித்தியசாலையிலும், பின்னர் வட்டுக்கோட்டை இந்து கல்லூரியிலும் ஆங்கில வழி மூலம் பாடங்களைப் படித்தவர். பின்னர்த் தொழில் துறைக்காகக் கொழும்பு கட்டுப் பெத்தை தொழில் நுட்பக் கல்லூரியில் பயின்றவர். எனினும் இவருக்கு இருந்த தணியாத தமிழ் விருப்பத்தால் தமிழறிஞர்களுடன் நெருங்கிப் பழகித் தமிழ் இலக்கண இலக்கியங்களை ஆர்வமாகக் கற்றுத் தேர்ந்தவர்.
பண்டிதர் கடம்பேசுவரன் அவர்களின் தாயார் 1968 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். அந்த வேளையில் தாயாரின் கடைசி ஆசையையும் தந்தையின் சொல்லையும் கேட்டு தாய்மாமன் குழந்தைவேலு-நல்லம்மா ஆகியோரின் மகள் மகேசுவரி என்பவரை 1974 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டவர். அந்த இனிய இல்லற வாழ்க்கையின் பயனாக 3.12.1975 அன்று மணிமார்பன்,
08.02. 1980 இல் மகள் ஆரணி, 02.07.1987 இல் மகன் துளசிவர்மன் பிறந்தனர். இவர்கள் அனைவரும் கல்வியில் சிறந்து, உயர் பொறுப்புகளில் உள்ளனர்.

கடம்பேசுவரன் ஈழநாடு, தினக்குரல், வீரகேசரி, உதயன் உள்ளிட்ட இதழ்களில் செய்தியாளராகவும் கட்டுரையாளராகவும் பல்வேறு நிலைகளில் 1979 முதல் 1986 வரை கடமையாற்றியவர்.







1.பண்டிதமணி சுப்பையா பிள்ளை, 2.பண்டிதமணி செ . துரைராஜசிங்கம், 3.கலாநிதி வித்துவான் க. ந. வேலன், 5. மகாவித்துவான் இலக்கண வித்தகர் பண்டிதர் இ .நமசிவாய தேசிகர் 6.பண்டிதர் பொன்னுத்துரை, 7. வித்துவான் இ .பொன்னையா, 8. பண்டிதமணி மு கந்தையா, 9. பண்டிதமணி சோ . இளமுருகனார், 10.பண்டிதர் இலக்கணக்கொத்து சி . இராசையா முதலிய அறிஞர் பெருமக்களுடன் பழகித் தம் தமிழறிவை வளர்த்துக்கொண்டவர்.

1977 இல் கலாநிதி வித்துவான் க. ந. வேல-னுடனான சந்திப்பால் தமிழ் கற்று, பால பண்டிதரானமையும், 1984 இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர், மட்டுவில் பொன்னுத்துரை பண்டிதர் ஆகியோரிடம் தமிழ் கற்றுப் பண்டிதரானமையும் குறிப்பிடத்தக்க செய்திகளாகும்.

1983- மாயன் என்னும் பெயரில் தொழிற்சாலையைத் தொடங்கி நடத்தினார். 1988 இல் ஈழநாடு பத்திரிகையில் இணைந்து எழுத்துப் பணிகளை ஆற்றினார்.

1990 இல் புனித பத்திரிசியார் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக இணைந்து, மாணவர்கள் உள்ளம் பதியும் வகையில் தமிழைப் பயிற்றுவித்தார்.

1992 இல் இவரின் மூலவேர் புத்தகம் வெளியீடு கண்டது. 1994 இல் வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச் சங்கத்தில் இணைந்தார்.

1994 இல் தமிழறிஞர் சரித்திரம், வட்டுக்கோட்டைத் தொகுதி - தமிழ்ச்சங்கத்தார் (தொகுப்பாசிரியர்கள்), வட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்கம். 1வது பதிப்பு: திசம்பர் 1994 வெளிவர முழுமையாக உதவினார். 1996 இல் ஆரிய திராவிட
பாஷா அபிவிருத்தி சங்கத்தின் செயலாளராகப் பொறுப்பேற்றுக்கொண்டு அளப்பரிய பணிகளைச் செய்தவர்.

2000 இல் சுன்னாகம் அவைக்காற்றுகைக் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்று எழுதிய நாடகங்கள் பலவாகும். மா. அருள்சந்திரனோடும் திருமதி கல்யாணி சுந்தரநேசனோடும் இணைந்து ”ஓதல்லோ” ”ஹாம்லெட்” “வெனிஸ் வணிகன்” ”தூண்டில் புழுவினைப்போல்” ”ஓலங்கள்” ஆகிய நாடகங்கள் மேடையேறின. அந்த அவைக்காற்றுகைக் குழுவின் ஊடாகக் “கல்யாணி” நாடக இலக்கிய இதழ் வெளியீடு செய்யப்பட்டது .

தொடர்ந்து சங்கம் வளர்த்த ஆன்றோர்கள் பண்டிதர் தா.பொன்னம்பலவாணர், கவிஞர் சோ.பத்மநாதன் (சோபா) என்போருடன் இணைந்து பாலபண்டிதர், பண்டிதர் வகுப்பு நடத்தித் தமிழ் இலக்கண இலக்கியப் பரவலுக்குக் காரணமாக இருந்தவர் . இவ்வகுப்புகளால் பலர் தமிழ் கற்றனர்.

2000-2003 இல் இவர் எழுதிய நாடகங்கள் ”பெண்மை கொல்லோ”, ”பெருமையுடைத்து” “வாழ்க்கைப் பயணங்கள் ” ”பாவலரும் காவலரும் ” ”பொறுப்பேனா யான்” ”ரமணி வள்ளல் ” எனபன மேடையேற்றப்பட்டன.

2004 இல் புனித பத்திரிசியார் கல்லூரியின் தமிழாசிரியர் பணியிலிருந்து பணியோய்வு பெற்ற கடம்பேசுவரன் இலக்கியப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறப்பு விரிவுரையாளராகப் பணியாற்றி மரபு இலக்கண நூல்களைப் பயிற்றுவித்தவர். சமய நிறுவனங்களில் அமைந்த இவரின் இலக்கண, இலக்கிய வகுப்புகளும் சமய இலக்கிய வகுப்புகளும் இலங்கைத் தமிழ் மாணவர்களால் பெரிதும் போற்றப்பட்டவையாகும்.

14.01.2009 இல் “சுகந்தனூல் பரிசு” சிறுவர் இலக்கியம் வெளிவந்தது. இது பின்னாளில் ”தீந்தேன்” இறுவட்டாக வெளியீடு கண்டது. இசையாகப் பாடியவர் பொன் - வாமதேவன், இசையைத் தந்தவர் தவநாதன் ஆவார். றோபேர்ட் வாத்தியம் விமல் சங்கர் ஆவார். இந்த இறுவட்டின் பாடல்கள் இணையத்தில் கேட்கும்படியாக வெளியிடப்பட்டுள்ளது. **https://www.youtube.com/watch?v= CORm84VLzxw&ab_channel=%E0%AE%89%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%95%E0%AF%88)**

ம. ந. கடம்பேசுவரன் பெற்ற விருதுகள்:
கடம்பேசுவரனாரின் புலமையையும் பணிகளையும் அறிந்த தமிழமைப்புகளும் அரசும் பல்வேறு விருதுகளையும் பாராட்டுகளையும் வழங்கிப் பெருமைபெற்றன.

- 2005 கலைவாரிதி விருது (வடமாகாண கலாசார திணைக் கழகம், வடமாக-ாணம்)
- 2009 இல் இலக்கியப்பேரவை விருது
- 2010 இல் சாகித்திய விருது.
- 2012 இல் வடமாகாண ”ஆளுநர் விருது” - (கலை பண்பாட்டு இலக்கியம்)
- விளையாட்டுத் துறை அலுவல்கள் அமைச்சு வட மாகாணம்.
- 9.12.2012 அன்று ஆளுநர் விருது வழங்கிக் கௌரவிப்பு செய்யப்பட்டது.
-2012 இல் கலா பூசணம் விருது (இலங்கை கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு)
- 17.01.2015 அன்று ஒஸ்லோவில் **(Norway)** நடைபெற்ற தைப்பொங்கல் நிகழ்வில் தமிழ்ச் சங்கத்தினால் சிறப்பிக்கப்பட்டார்.
- 2017 இலங்கை தமிழ் இலக்கிய நூலகமும் இலண்டன் தமிழ் இலக்கிய சங்கமும் இணைந்து கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடத்திய இலக்கியப் பெருவிழாவில் தமிழ் வளர்ச்சி இலக்கிய விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.
- 16.12.2017 இ. தா. உதயணன் இலக்கிய விருது
- 22.11.2019 இல் வலிகாமம் - மேற்குக் கலாசார பண்பாட்டுப் பெருவிழாவின்போது பிரதேச கீதம் இயற்றியமைக்காகக் கலாசார பேரவையும், கலாசார அதிகார சபையும், வலிகாமம்- மேற்குப் பிரதேச செயலகம் சங்கானையால் சிறப்பிக்கப்பட்டு, விருது வழங்கப்பட்டது

- 2021 இரண்டாவது அனைத்து உலகத் தமிழில் ஆய்வு மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபொழுது தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் இவர் ஆற்றிய பெரும் பங்களிப்பினைச் சிறப்பிக்கும் வகையில் நினைவுச் சின்னமும் இலக்கியப் பண்பாட்டு பொதுப் பணிகளுக்காக ”கலைநேயப் பரிதி” என்ற விருதும் வழங்கப்பட்டன.

நன்னூல் விருத்தியுரை, தொல்காப்பியம் எழுத்ததிகாரம், முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்களின் வெளிவராத பாடல்கள் எனும் மூன்று புத்தகங்களும் 2024 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சான்றோர்களால் வெளியீடு செய்யப்பட்டன.

சைவ இலக்கியங்களில் பேரீடுபாடும் பெரும் புலமையும் கொண்ட கடம்பேசுவரனார் அவர்கள் நாவலர் மகா வித்தியாலயத்தில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இளஞ்சைவப் புலவர், சைவப் புலவர் பட்டங்களைப் பெறுவதற்கு முனைந்த மாணவர்களுக்குச் சைவ சமய நூல்களைப் பயிற்றுவித்து ஈழத்தில் சைவப் பயிர் வளர்வதற்குத் துணை நின்றவர்.

தொல்காப்பியத்தைப் பயிற்றுவிப்பதைப் பெரும் ஈடுபாட்டுடன் செய்தவர். தொல்காப்பியத்தின் மேல் கொண்ட ஈடுபாட்டின் காரணமாகத் தம் புனைபெயரைக் காப்பியதாசன் என்று அமைத்துக்கொண்டவர். தொல்காப்பியத்துடன் நன்னூல், நன்னூல் காண்டிகை உரைகளைக் கற்பித்து ஈழத்தில் தமிழ்ப் புலமை வேரூன்றக் காரணமாக விளங்கியவர்.

ஆரிய திராவிட பாஷா அபிவிருத்தி சங்கத்தின் தலைவராக நாற்பது ஆண்டுகளாகப் பணியாற்றியவர்.
மயில்வாகனம் நவரத்தினம் கடம்பேசுவரன் 16-04-2024 செவ்வாய்க் கிழமை இலங்கையில் இயற்கை எய்தினார்.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் என். சண்முகலிங்கன், ”ஈழத்து மரபுவழி பண்டிதக் கல்வியின் பேராசானைத் தமிழுலகம் இழந்து நிற்கின்றது. கடந்த அரை நூற்றாண்டுக் காலமாக மரபுவழித் தமிழ்க் கல்வி நிறுவனமான ஆரிய திராவிட பா'ாவிருத்தி சங்கத்தைப் பல்வேறு இன்னல்களின் மத்தியில் காத்து நின்ற செயல் வீரனின் மறைவு ஈடுசெய்ய முடியாதது” என்று குறிப்பிட்டுள்ளார்.

பண்டிதர் ம. ந. கடம்பேசுவரனாரின் தமிழ்க்கொடைகள்:

- பொற்காலம்
- மூல வேர்
- தமிழ் இலக்கியத் திறனாய்வும் கோட்பாடும்
- தீந்தேன் (இறுவட்டு)
- பொறுப்பேனா யான்
- காப்பியதாசன் கட்டுரைகள்
- இலக்கண மரபு
- நன்னூல் விருத்தியுரை: விளக்கமும் அகலவுரையும்
- செந்தமிழ் காப்போம்
- முது தமிழ்ப் புலவர் வெளிவராத பாடல்கள்
- தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (உயர் கல்விக்கான வினா-விடை வழிகாட்டி)
- தொல்காப்பியச் செய்யுளியல் ஆய்வுச் சுருக்கம்

# ரொறன்ரோ மாநகரத்தில் கோலாகலமாக நடைபெறவுள்ள 15ம் உலகத் தமிழாசிரியர்கள் மாநாட்டில் "தமிழோசை" என்னும் சங்கத் தமிழ்ப் பாடல்கள் ஒலிக்கும் நிகழ்வை நடத்த கனடா வந்துள்ள பிரபல இசையமைப்பாளர் ஜேம்ஸ் வசந்தன்









ரொறன்ரோவிலிருந்து
ஆர். என். லோகேந்திரலிங்கம்
------------------------------------------------

கனடாவில் தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் ரொறன்ரோ மாநகரத்தில் அமைந்துள்ள ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் ஸ்கா-புறோ வளாகத்தில் எதிர்வரும் யூன் மாதம் 1ம்.2ம், 3ம் தி-கதிகளில் நடைபெறவுள்ள கோலாகலமாக நடைபெறவுள்ள 15ம் உலகத் தமிழாசிரியர்கள் மாநாட்டில் தமிழ்க் கல்வி சார்ந்ததும் தமிழிசை சார்ந்தும் பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என கனடியத் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் படிமுறைத் தமிழ் ஒன்றியத்தின் நிறுவனருமான சுப்பிரமணியம் இராசரத்தினம் ரொறன்ரோ வி-மான நிலையத்தில் தெரிவித்தார்.

மேற்படி 3 நாள் தமிழாசிரியர்கள் மாநாட்டில் விசேட நிகழ்ச்சியாக நடைபெறவுள்ள "தமிழோசை" என்னும் சங்கத் தமிழ் பாடல்கள் மற்றும் தமிழிசைப் பாடல்கள் ஆகியவற்றை இசையோடு பாடும் நிகழ்ச்சியை நடதத தமிழ்ச் சினிமாவின் பிர-பல இசையமைப்பாளரும் தமிழ் மொழி மீது பற்றுக் கொண்டவருமான ஜேம்ஸ் வசந்தன் அவர்கள் கடந்த புதன்கிழமை ரொறன்ரோ விமான நிலையத்தில் வந்திறங்கினார்.

அங்கு திரண்டு வந்து ஜேம்ஸ் வசந்தன் அவர்களை வரவேற்ற தமிழ் அன்பர்கள் இசைஅபிமானிகள் மற்றும் மாணவ மாணவிகள் ஆகியோர் மத்தியில் அவரை அறிமுகம் செய்து வைத்தார் கனடியத் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் படிமுறை-த் தமிழ் ஒன்றியத்தின் நிறுவனருமான சுப்பிரமணியம் இராசரத்தினம்.

தொடர்ந்து ஊடகவியலாளர்களுடன் உரையாடிய இசையமைப்பாளர் ஜேம்ஸ் வசந்தன் அவர்கள் 'எனது இந்த விஜயம், கனடாவிற்கான முதலாவது விஜயமாக இருந்தாலும் தமிழிசை சார்ந்து சங்கத் தமிழ் பாடல்கள் சார்ந்து உள்ளதால் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்" என்றார்.

# "உதயன்" சிறப்பு விருதினைப் பெறுவதற்காக பிரான்ஸ் வாழ் அருள்மொழித்தேவன் 22ம் திகதி ரொறன்ரோ விமான நிலையத்தில் வந்திறங்கினார்







எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 26ம் திகதி கனடாவின் ஸ்காபுறோ நகரில் நடைபெறவுள்ள "உதயன் சர்வதேச விருது விழா-2024" இல் மூன்று வெளிநாட்டு வாழ் தமிழ் சாதனையாளர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேற்படி விருது விழாவில் ஐரோப்பியா வாழ் தமிழர்களிலிருந்து "உதயன்" சிறப்பு விருதினைப் பெறுவதற்காக தெரிவு செய்யப்பெற்றுள்ள பிரான்ஸ் வாழ் அருள்மொழித்தேவன் அவர்கள் கடந்த புதன்கிழமை 22ம் திகதி ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கினார்.

அப்போது.அங்கு அவரை வரவேற்கச் சென்றிருந்த அவரது நண்பர்கள் உறவினர்கள் மற்றும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர். யுகம் வானொலியின் அதிபர் கணபதி ரவீந்திரன் ஆகியோர் அருள்மொழித் தேவன் அவர்களோடு சேர்ந்து எடுத்துக்கொண்ட படங்கள் இங்கு காணப்படுகின்றன.

விருது பெறவுள்ள அருள் மொழித்தேவன் அவர்கள் பிரான்ஸ் தேசத்தில் நடைபெ-றும் தமிழர் விழாக்கள் தமிழிசை விழாக்கள் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதி சேகரிப்பு நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்வதிலும் ஒலிபரப்புச் செய்வதிலும் நன்கு அறியப்பெற்றவராக விளங்கி வருபவர்.

அத்துடன் அண்மையில் பிரான்ஸ் வாழ் தமிழ்த் தேசிய உணர்வாளர்களால் நடத்தப்பெற்ற கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் 75வது அகவைத் திருநாள் விழாவை நடத்திய விழாக் குழுவில் முக்கிய பங்குவகித்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# போரில் உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்து வெள்ளவத்தையில் நினைவேந்தல் நிகழ்வில் குழப்பத்தை விளைவிக்க முயன்ற "சிங்கள ராவய"

(பின் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி, கடந்த ஆண்டைப்போன்றே இம்முறையும் கொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்களால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வு 18-05-2024 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வெள்ளவத்தை புகையிரத நிலையத்துக்கு அண்மையிலுள்ள கடற்கரையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களான "ரீன் ஸரூர், சுவஸ்திகா அருலிங்கம், சந்தியா எக்னெலிகொட, ராஜ்குமார் ரஜீவ்காந்த், கௌதமன், ரத்னவேல், நுவன் போ-பகே உள்ளிட்ட பலரும், கத்தோலிக்க மதகுருமாரும், பொதுமக்களும் கலந்துகொண்டிருந்தனர்.

கடந்த வருடம் கொழும்பில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் 'சிங்கள ராவய' அமைப்பினரால் குழப்பம் விளைவிக்கப்பட்டிருந்த நிலையில், இம்முறையும் பிற தரப்பினரால் இடையூறு ஏற்படுத்தப்படக்கூடும் என்ற சந்தேகம் நிலவியது. அதன்படி, நினைவேந்தல் நிகழ்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த கடற்கரைப்பகுதிக்கு அண்மையில் காலையிலேயே பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

அதனையடுத்து 9.30 மணியளவில் அங்கு கூடியிருந்த அனைவரும் ஈகைச்சுடரேற்றி, அதில் வெண்ணிற மலர்தூவி போரில் உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்தனர். இந்நினைவுகூரல் இடம்பெற்றுக்கொண்டிருந்த தருணத்தில், பிறிதொரு குழுவொன்று கொடி-களை ஏந்தி கூச்சலிட்டவாறு கடற்கரைப்பகுதிக்குள் உட்பிரவேசித்து நினைவேந்தல் நிகழ்வுக்கு இடையூறு விளைவிக்க முற்பட்ட வேளையில், அங்கு குவிக்கப்பட்டிருந்த பொலிஸாரால் அவர்கள் தடுத்துநிறுத்தப்பட்டனர்.

அதனைத்தொடர்ந்து நிகழ்வை விரைவாக முடித்துக்கொண்டு அங்கிருந்து அனை-வரையும் வெளியேறுமாறும், தாமதமேற்படின் அதன் பின்னர் நிகழக்கூடியவற்றுக்குத் தம்மால் பொறுப்புக்கூறமுடியாது எனவும் பொலிஸ் அதிகாரி-யொருவர் சட்டத்தரணி ரத்னவேலிடம் எச்சரித்தார்.


இக்குழப்பங்களுக்கு மத்தியில் நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றிய சிவில் சமூக செயற்பாட்டாளர்களான சந்தியா எக்னெலிகொட, மிலானி மற்றும் ராஜ்குமார் ரஜீவ்காந்த் ஆகி-யோர் போர் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு 15 வருடங்கள் கடந்திருக்கும் நிலையில், போரில் உயிர்நீத்தவர்களை நினைவுகூரவேண்டியதன் தேவைப்பாட்டையும், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிசெய்யப்படவேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டிப்பேசினர். அதேபோன்று வட, கிழக்கு மாகாணங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சியை விநியோகிப்பதற்கும், உயிர்நீத்த உறவு-களை நினைவுகூருவதற்கும் தடைவிதிக்கப்பட்டு, இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டமை குறித்து தமது கண்டனத்தையும் வெளிப்படுத்தினர். அதன்பின்னர் அனைவரும் ஒன்றிணைந்து வெள்ளை மலர்களை கடலில் தூவி உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அதேவேளை, நினைவேந்தல் நிகழ்வுக்கு சற்றுத் தாமதமாக வருகைதந்த காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் முன்னாள் ஆணை-யாளரும், சிவில் சமூக செயற்பாட்டாளருமான மிராக் ரஹீம் உள்ளிட்ட செயற்பாட்டாளர்கள் தண்டவாளத்துக்கு அண்மையிலேயே பொலிஸ ாரால் தடுத்துநிறுத்தப்பட்டனர். நிகழ்வில் குழப்பம் விளைவிப்பதற்கென குழுவொன்று வருகைதந்ததாகவும், எனவே தாமதமாக வந்த செயற்பாட்டாளர்களை தாம் அறிந்திருக்காததன் காரணமாக அவர்களையும் உள்ளே அனுமதிக்கவில்லை எனவும் பொலிஸ ார் விளக்கமளித்தனர். பின்னர் அனைவரையும் வெ-குவிரைவாக அங்கிருந்து கலைந்துசெல்லுமாறு பொ-லிஸார் அறிவுறுத்தியதைத்தொடர்ந்து, அனைவரும் கலைந்து சென்றனர்.

**Courtesy: Virakesari**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1101

## மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

### கொக்குவில், யாழ்ப்பாணம்

இவ்வாறாக பல்வேறு திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு, 1989 ஆம் வருடம் சிறப்பானமுறையிலே மகாகும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. இக்கும்பாபிஷேகக் கிரியைகளை, பிரதிஷ்டாகுரு சிவஸ்ரீ க.குகதாசக்குருக்கள் பிரதம குருவாக விளங்கி, சிவஸ்ரீ கா.மகாதேவக்குருக்கள், மற்றும் சுன்னாகத்தைச் சேர்ந்த சகலாகமசங்கரர் சிவஸ்ரீநா. சர்வேஸ்வரக் குருக்கள் ஆகியோருடைய அனுசரணையுடனும், மற்றும் பல சிவாச்சாரியார்களின் உதவியுடனும் நிறைவேற்றியுள்ளார்.

இதே வருடம் நடைபெற்ற மகோற்சவத்தின்போது, முருகப்பெருமானுக்கு ஒரு சப்பறம் அமைக்கவேண்டும் என்ற எண்ணம், முருகன் அடியார்கள் உள்ளத்திலே தோன்றியது. இதன் விளைவாக கொக்குவில் வைத்திலிங்கம் சற்குணம் அவாகள், 1990 ஆம் ஆண்டு சப்பறம் ஒன்றை உருவாக்கி உபயமாக அளித்துள்ளார்கள்.

இவ்வாறாக படிமுறையாக வளர்ச்சிபெற்று வந்த இவ்வாலயத்தின் வரலாற்றிலே, 1998 ஆம் ஆண்டு மிக முக்கியமான காலகட்டமாகக் காணப்படுகின்றது. இவ்வாண்டின் ஆலம்பத்திலே நடைபெற்ற மகாசபைக் கூட்டத்தில், திரு. த.கணேசபிள்ளை, திரு. இ.இராசலிங்கம், திரு. க.இ.இராசசேகரம் ஆகியோரை முறையே தலைவராகக் கொண்டு, பன்னிரண்டு உறுப்பினர்களுடன் நிர்வாகசபையொன்று தெரிவுசெய்யப்பட்டது. இவர்களின் முயற்சியினால் கோயில் கிணற்றடிவரை தார்போட்டதெருவொன்று அமைக்கப்பட்டது. அத்தோடு கோயிலின் தென்மேற்குப்புறமுள்ள மண்வீதியும் தார்போட்டு செப்பனிடப்பட்டது.

இக்காலப்பகுதியில் இவ்வாலயத்திலே பாரிய திருப்பணிவேலைகள் செய்யவேண்டிய நிலை காணப்பட்டது. இக்காரணத்தினால் 1999 ஆம் ஆண்டு திருப்பணிச்சபையொன்று நிறுவப்பட்டது. ஆரம்பகாலத்தில் பல்வேறு திருப்பணிகளுக்கு உறுதுணையாகவிருந்த அமரர் ச.வே.சண்முகம்பிள்ளை அவர்களால், வியாழவரிவரை கட்டப்பட்டுக் காணப்பட்ட கோபுரத்தை அத்திவாரமாகக்கொண்டு, இராஜகோபுரம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. இப்பணிக்கு முன்னின்று உழைத்தவராக திரு. சபாரத்தினம் சண்முகரத்தினம் அவர்கள் விளங்கியுள்ளார்கள்.

இப்பெரியவர் கனடாவிலுள்ள முருகனடியார்களிடம் நிதி சேகரித்தும், தன்னுடைய பங்களிப்பாக நிதியையும் சேர்த்து அனுப்பி, இப்பணியைத் தொடக்கிவைத்துப் பெரும்பணி ஆற்றியுள்ளார். அத்தோடு இவ்வாலயத்தோடு தொடர்புகொண்ட கொழும்பிலுள்ள முருகன் அடியார்களும், உள்ளூரிலுள்ள அடியார்களும்சேர்ந்து வழங்கிய நிதியின்மூலம், இராஜகோபுரத்திருப்பணியும், காண்டாமணிக் கோபுரங்களும் நிறைவுசெய்யப்பட்டன.

மஞ்சவனப்பதி இராஜகோபுரக் கட்டடவேலைகளை, அராலியூர் திரு. கந்தசாமி கோபாலசிங்கம் அவர்களும், இராஜகோபுரத்தின் சிற்பவேலையை அவ்வூரைச் சேர்ந்த திரு. மார்க்கண்டு மதியழகன் அவர்களும் செய்துள்ளனர். வர்ணந்தீட்டும் வேலைகளை திரு. கந்தசாமி சுந்தரலிங்கம் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

இராஜகோபுரத்திற்கு இருபக்கமும் மணிக்கூட்டுக்கோபுரங்கள் அமைந்துள்ளன. இவற்றில் பிள்ளையார் மணிக்கூட்டுக் கோபுரத்தை திரு. க.வை. சற்குணம் அவர்க்ள தமது செலவில் கட்டுவித்தள்ளார். அத்தோடு அதற்குரிய காண்டாமணியையும் தமது சகோதரர் திரு. க.வை.சிவநேசன் அவர்களுடைய ஒத்துழைப்புடன் நிறுவியுள்ளார்.

இவ்வாறான ஆலயத்திற்கு, தீர்த்தக்கேணியொன்று தேவையென்பதை அன்பர்கள் உணாந்தனர். கோயிலின் வடகிழக்குப்பக்கமாக அமரர் பொன்னம்பலம் காசிப்பிள்ளை அவர்களால் தர்மசாசனம் செய்யப்பட்ட நிலப்பரப்பிலே, கோயிலுக்குரிய தீர்த்தக்கேணியை அமைக்க எண்ணங்கொண்டனர். திரு. காசிப்பிள்ளை பொன்னம்பலம் அவர்களின் ஒத்துழைப்புடன், அமரர் வல்லிபுரம் நவரத்தினம் அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது துணைவியார் சிவஞானவல்லி அம்மையாராலும், அவரது குடும்பத்தினராலும் தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டது. இத்தீர்த்தக்கேணியில் 2001 ஆம் ஆண்டு, மஞ்சவனப்பதியில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் தீர்த்தமாடியமை குறிப்பிடத்தக்கதாகும். இதே ஆண்டில் பொறியிலாளா இராசரத்தினம் நடராசா அவர்களாலும், அவர்தம் குடும்பத்தினராலும் ஆரம்பிக்கப்பட்ட கோபுர முன்மணி மண்டபப்பணி, நிர்வாகத்தினரதும் முயற்சியாலும், இளந்தொண்டர்களது சரியைத் தொண்டினாலும் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது.

கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்தின் வெளிவேலைகள் பல நிறைவுபெற்ற வேளையில், உட்பிரகார மண்டபவேலைகளை நிறைவேற்றவேண்டியநிலை காணப்பட்டது. இப்பணிக்காக, 2001 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சினால், எம். பி.தவராஜா அவர்களால் உட்பிரகாரப்பணிக்காக பதினைந்து இலட்சரூபா வழங்கப்பட்டது. இதன்பின்னர் இரண்டரை இலட்சரூபா பெறுமதியான காசோலை, மேற்படி அமைச்சினால் பிரதேசசபைத் தலைவராக இருந்த மணிபல்லவராஜன் அவர்களால் வழங்கப்பட்டது.

இப்பணிகளின் மேற்பார்வையாளர்களாக பொறியியலாளர் திரு இ.நடராசா, பிரதேசசபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் மற்றும் பிரதேச உதவிச் செயலர் வேன்முருகோன்பிள்ளை ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இவர்களோடு நிர்வாகசபையின் ஒத்துழைப்புடனும், முருகனடியார்கள் மனமுவந்தளித்த நிதியுதவியுடனும் உட்பிரகார முன்பகுதி மண்டபம் கொங்கிறீற்றால் கட்டிமுடிக்கப்பட்டது.

இவ்வாறான பலபணிகள் நிறைவேற்றப்பட்டு, புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா நூதன இராஜகோபுரபிரதிஷ்டா நவகுண்டபட்ஷ மகாகும்பாபிஷேகம், 2002 ஆம் ஆண்டு மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக்கும்பாபிஷேகத்தினை பிரதிஷ்டாபூஷணம் சிவாச்சாரியமணி சிவப்பிரம்மஸ்ரீ இரங்க. வரதராஜக்குருக்கள் தலைமையில், மற்றும் பல சிவாச்சாரியார்களின் ஆதரவுடன் சிறப்பாக நிறைவேற்றிவைத்தார்கள். இதன் பின்னரும் காலத்திற்குக் காலம் இன்றுவரை பல பணிகள் தொடர்ந்தும் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்திலே இலங்கையில் உள்ள யோகிகளும், ஞானிகளும் கால்பதித்துச் சென்றுள்ளனர். இந்தியாவிலிருந்தும் பல மகான்கள் காலத்திற்குக் காலம் வருகை தந்து சிறப்பித்துள்ளனர். 1916 ஆம் ஆண்டு இவ்வாலயத்திற்கு வருகை தந்த சங்கர சுப்பையர் என்னும் கல்விமான், மஞ்சவனப்பதியிலே உபந்நியாசம் செய்யும்பொழுது, "இத்தேவஸ்தானம் பலவழிகளிலும் சிறந்தோங்கப் போகின்றது" என்று குறிப்பிட்டார்கள். அப்பெரியவரின் வாக்குப் பலித்து இவ்வாலயம் இன்று பல வழிகளிலும் சிறப்புற்றோங்கும் ஆலயமாக விளங்குகின்றது.

இலங்கையைச் சேர்ந்த கோடாலிச் சாமியார், பண்டிருட்டிச் சாமியார், சின்னையாச் சாமியார், குடைச் சாமியார், யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகள், போன்றவர்கள் இவ்வாலயத்திற்கு வருகைதந்து பெருமைப்படுத்தியுள்ளனர். யோகர்சுவாமிகளின் அருள்நோக்கத்தால், ஆறுமுகக் கடவுளுடைய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டது. இவர்களோடு இந்தியாவிலிருந்து திருமுருக கிருபானந்தவாரியார்சுவாமிகள், பன்றிமலைச்சுவாமி, அத்வர்யு சுவாமிகள், தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த திருஞானசம்பந்தபிள்ளை போன்றவர்களும் இங்கு வருகை தந்து தேவஸ்தானம் வளர உதவியுள்ளார்கள். கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன்மீது கிருபானந்தவாரியார் சுவாமிகளும், கொக்குவில் குமாரசாமிப்புலவர் அவர்களும் பல பாடல்களை இயற்றியுள்ளனர். வாரியார் சுவாமிகள் மஞ்சவனப்பதி பஞ்சரத்தினப்பா என்றும், திருப்புகழ்சந்த மெட்டில் முருகன்மீது குகப் புகழும் பாடியுள்ளார். கொக்குவில் குமாரசாமிப் புலவர் அவர்கள், மஞ்சவனப்பதிகம், திருவூஞ்சல், ஏசல் என்பவற்றைப் பாடியுள்ளார்.வாரியார் சுவாமிகள் எழுதிய திருப்புகழ் அமிர்தக் கட்டுரையில், "கண்டேன் கந்தனை" என்று மஞ்சவனப்பகுதி முருகன் திருவருளை வியந்து எழுதியமை குறிப்பிடத்தக்கதாகும். ஒரு நல்ல பக்தனாக, கல்விமானாக, ஒழுக்கசீலராக, மகாஞானியாக தேவதெண்டுகள் செய்தவராக இன்றுவரை இந்துமக்களால் போற்றப்படும்வாரியார் சுவாமிகள், கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்தோடு ஆழ்ந்த தொடர்பு கொண்டவராக விளங்கியுள்ளார்.

ஆதிகாலத்தில் ஒருவேளை பூசை மாத்திரமே நடைபெற்ற கோயிலாகக் காணப்பட்ட கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயம், இன்று பெருவளாச்சி கண்டு காணப்படுகின்றது. இவ்வாறான வளர்ச்சிக்கு காலத்திற்குக் காலம் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகசபை, திருப்பணிச்சபை, முருகபக்தர்களின் தொண்டு என்பவை முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஆலயங்கள் வெறும் வழிபாட்டிடங்களாக அமையாது, வழிபடுவோரையும் இறைவனையும் இணைக்கின்ற பக்தி நிலையங்களாகவும் அமைந்து, இந்துக்களுடைய கலாச்சார, பண்பாட்டை வளர்க்கின்ற பணிகளையும் உலகெங்கிலுமுள்ள இந்து ஆலயங்கள் செய்து வருகின்றன. இவ்வாறான ஆலயங்கள் தாயகத்தில் தொடர்ந்தும் வளர்ச்சி பெறவும், தமிழர்களுடைய எஞ்சிய வாழ்விட அடையாளங்களைத் தொடர்ந்து காப்பாற்றவும் உதவும் ஆலயங்களைப் பேணுவது, புலம்பெயர்ந்த தமிழ் மக்களுடைய பெரும்பணியாகக் காணப்படுகின்றது.

"பன்னிரு தடந்தோள் வள்ளல் பாத பங்கயங்கள் போற்றி".

*வளரும்...*




OM NAMO NARAYANA



125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்

N. P. ராஜசேகர்

Now In: 16 TREELINE COURT MARKHAM
L3S 3T8 CANADA
001 416 904 6278

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டசுற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு, புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

பரிகார காண்டங்கள்

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது தீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்றியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது

குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இவ்வார ராசிபலன்

**24-05-2024 வெள்ளி தொடக்கம் 30-05-2024 வியாழன் வரையும்**




**மேஷம்:** பெத்தவங்களோட ஆசி கிடைக்கும் வாரம். வீடு தேடி வெற்றி வரும். மருத்துவச் செலவு உண்டு. பொன் பொருள் சேரும். பணவரவு உயரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமி லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி உயர்வு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. கல்வியில் ஆர்வம் கூடும். வருமானம் திருப்தி தரும். புதிய நட்பு உருவாகும். பழையக்கடன் தீரும். குதூகலம் சேரும். எதிலும் கவனமாக செயல்பட வேண்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. தோதான எண்ணம் உருவாகும். போதாத காலம் விலகும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். முயற்சிகள் பலன் தரும். காரிய வெற்றி கிட்டும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். ஆடை, அணிகலன் சேரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு தரும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பாராட்டுக்கள் உயரும். வெளியூர் பயணம் நன்மை தரும். வெகுமதி கூடும். குதூகலமான மனநிலை காணப்படும். ஆனந்தம் பெருகும். செயலில் துணிவு கூடும். குடும்ப உறவு பலப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காவல்தெய்வம், அதிர்ஷ்ட எண்: 6,8,1,2
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,H




**ரிஷபம்:** அருளும், பொருளும் சேரும் வாரம். வெகுமதி பெருகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் முடிவுகள் உண்டு. அரசியலில் ஆதாயம் உண்டு. நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். நினைத்த செயலை சாதித்துக் காட்டுவீர்கள். பொதுவிஷயங்களில் நாட்டம் ஏற்படும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கடன் சுமையில் இருந்து விடுபடுவீர்கள். நண்பர்கள் உங்களை தேடி வருவார்கள். வாய்ப்புக்கள் பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். திறமைகள் வெளிப்படும். சேமிப்பு உயரும். பழைய கடன் அடையும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. பணப்பற்றாக்குறை நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 1,4,2,5
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K




**மிதுனம்:** பாசமும், நேசமும் பெருகும் வாரம். மனக்குழப்பங்கள் தீரும். கணவன் மனைவி அன்யோன்யம் கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம்புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். எதிர்ப்புகள் குறையும். ஆதாயம் பெருகும். உடல்நலம் சிறக்கும். தேக பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். இல்லத்தில் அமைதி கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு திருப்தி தரும். நீண்ட நாளைய நோய் விலகும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தொட்ட காரியம் ஜெயமாகும். பொருளாதார நிலை உயரும். திருமண பேச்சு கைகூடி வரும். மாணவர்களுக்கு சாதகமான காலம். தொழிலாளர்களுக்கு மனநிறைவு ஏற்படும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. தொழில் முயற்சி வெற்றி தரும். குடும்பத்தில் அமைதி உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். பங்குசந்தையில் லாபம் தரும். குடும்பத்தில் அமைதி நிலவும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கடன்சுமை குறையும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,3,1,5
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,P




**கடகம்:** வளமும், ஜெயமும் கிடைக்கும் வாரம். பிரார்த்தனை பலன் கொடுக்கும். கல்வியில் மேன்மை உண்டு. உடல் பொலிவு கூடும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். சுபகாரியம் இல்லத்தில் இனிதே நடந்தேறும். மனதில் மகிழ்ச்சி கூடும். நட்பு வட்டம் விரிவடையும். வங்கி சேமிப்பு உயரும். பேச்சில் நிதானம் தேவை. எதிலும் கவனமாக செயல்பட வேண்டும். அலைச்சல் அதிகரிக்கும். ஆரோக்கியம் கூடும். மாற்று யோசனை பலன் தரும். வேலை வாய்ப்புக் கூடும். குடும்ப பிரச்சனைகள் தீரும். அற்புத வாய்ப்பு கிட்டும். உடல்வலியிலிருந்து விடுதலை அடைவீர்கள். மனதில் சந்தோஷம் அதிகரிக்கும். பிள்ளைகளிடத்தில் அன்பு அதிகரிக்கும். பொன்னான நேரம் உங்களை வந்து அடையும். நினைத்த காரியங்களில் வெற்றி நிகழும். இனிதான செய்திகள் கூடி வரும். சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். நாவடக்கம் தேவை. மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். பங்குத்தொழில் பணம் தரும். முற்போக்கு சிந்தனை வரும். சேமிப்பு அதிகமாகும். சீரான வாழ்வு அமையும். தாய்வழி உறவில் கவனம் தேவை. கலைத்தொழிலில் கவனம் தேவை. உணவுத்தொழில் உயர்வு தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். சேமிப்பு உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Q



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**சிம்மம்:** நிதர்சனமான லாபம் கிடைக்கும் வாரம். உன்னதமான காலம். முயற்சிகள் பலிதமாகும். பெண்களால் பெருமை சேரும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். வணிகத்தொழில் விரிவடையும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். பணப்பற்றாக்குறை நீங்கும். நன்மைகள் பெருகி வரும். பொருளாதார வாய்ப்பு தேடி வரும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். எதிர்மறையான எண்ணங்கள் விலகும். மனஅமைதி உண்டாகும். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். விவசாய விளைச்சல் அதிகமாகும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். மனக்கசப்பு வந்து நீங்கும். சில வாய்ப்புகள் தேடி வரும். தொழிலில் அபிவிருத்தி அடையும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். சகோதரியினால் நன்மை உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. அரசு வழியில் ஆதாயம் உண்டு. துன்பங்கள் அகலும். தீய எண்ணம் விலகும். விளையாட்டில் கவனம் தேவை. மாற்று யோசனை பலன் தரும். பங்குச்சந்தை கவனம் தேவை. கடன் வாங்க நேரிடும். மனநிம்மதி கூடும். மருத்துவச் செலவு குறையும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். காதல் கண்ணியம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரம்மதேவன், அதிர்ஷ்ட எண்: 9,2,1,4
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,J




**கன்னி:** மரபை மீறி பேசிய உறவு பாராட்டும் வாரம். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். ஆண்களின் அதிகாரம் உயரும். குடும்ப அன்யோன்யம் பெருகும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. உத்தியோக இடமாற்றம் உண்டு. பயணத்தால் பணவரவு உண்டு. பிள்ளைகள் எண்ணம் பூர்த்தியாகும். உடல்நலத்தில் கவனம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். வார்த்தைகளில் கவனம் தேவை. வாய்ப்புகள் சாதகமாக அமையும். தொழில் வளர்ச்சி கூடும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். பருப்பு தானம் பாவம் போக்கும். நிம்மதி பெருகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். பங்குச்சந்தையில் லாபம் தரும். செய்தொழில் சிறக்கும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். கொடுக்கல், வாங்கல் சுமூக நிலை ஏற்படும். திருமண பாக்கியம் கைகூடி வரும். புதிய முயற்சியை தள்ளிப் போடுங்கள். தெம்பும், தைரியமும் கூடும். தாராளமான வருமானம் உண்டு. பொதுப்பிரச்சனைகள் விலகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீஹய்காரிவர், அதிர்ஷ்ட எண்: 3,1,9,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,N




**துலாம்:** நியாயமான ஆசைகள் நிறைவேறும் வாரம். கையிருப்பு கரையும். வெகுமதி கூடும். தொழில் வாய்ப்புகள் பெருகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவிற்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் ஏற்படும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். தங்க நகைகள் சேரும். கடன் தொல்லை நீங்கும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். புதிய முயற்சிகள் பலன் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. மனைவியின் அன்பு அதிகரிக்கும். புகழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். ஞாபக திறன் கூடும். சுபகாரியம் கைகூடும். குடும்பத்தில் அமைதி உண்டு. நண்பர்கள் உதவி கிட்டும். தொழில்முயற்சி வெற்றி தரும். பணவரவு உண்டு. காரியங்களில் வெற்றி காண்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: சரஸ்வதிதேவி, அதிர்ஷ்ட எண்: 5,1,3,2
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,W




**விருச்சிகம்:** செல்வமும், புகழும் கிடைக்கும் வாரம். பழையக் கடன் வசூலாகும். உறவினர் வருகை உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. தந்தை உடல்நலனில் அக்கறை தேவை. அன்னதானம் ஆரோக்கியம் தரும். குதூகலமான காலம். அன்னிய தேச பயணம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். காரியங்கள் வெற்றி முகமாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. சிக்கனம் தேவை. விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். வழிபாடு மாற்றம் தரும். நண்பர்களால் மதிப்பு உயரும். பணியில் இடமாற்றம் தேவை. வாழ்க்கை தரம் உயரும். பேச்சில் கவனம் தேவை. வரவுகள் திருப்தி தரும். நினைத்த விஷயம் நிறைவேறும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். உதவிகள் குவியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 6,4,2,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J

(தொடர்ச்சி 22 பக்கம்)

Canadian Tamil Sangam
படிமுறைத்தமிழ் ஒன்றியம் PADIMURAI TAMIL FEDERATION
உலகத் தமிழாசிரியர் பேரவை World Tamil Teachers' Organisation
ABC
Historical and Cultural Studies
UNIVERSITY OF TORONTO
SCARBOROUGH

# 15-ஆம் உலகத் தமிழாசிரியர் மாநாடு

## தமிழக அரசின் கல்விக்கான விருது - 2023

தமிழக அரசினால் நடத்தப்படும் அயலகத்தமிழர்களின் மாநாடானது தைமாதம் 11, 12 ஆம் திகதிகளில் சென்னையிலில் நடைபெற்றது. அவ்வேளையில், 2023 ஆம் ஆண்டின் கல்விக்கான தமிழக அரசின் விருது படிமுறைத்தமிழ் ஒன்றியத்தின் தலைவரான அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த திரு. முருகேசு பரமநாதன் அவர்களுக்குத் தமிழக முதல்வர் திரு. மு. க. ஸ்ராலின் அவர்களால் வழங்கிச் சிறப்பிக்கப் பட்டது. படிமுறைத்தமிழ் ஒன்றியம் என்பது, படிமுறைத்தமிழ் எனும் கற்பித்தல் முறையைப் பின்பற்றி உலகெங்கும் தமிழ்மொழியைக் கற்பிக்கும் பாடசாலைகளின் கூட்டமைப்பாகும். இக்கற்பித்தல் முறையின் நிறுவனர் கனடாவைச் சேர்ந்த சித்தம் அழகியான் சு. இராசரத்தினம் என்பது குறிப்பிடத்தக்கது. உடன் இருப்போர் திரு. லோகன்கணபதி MPP, செல்வம்அடைக்கலநாதன் MP, அமைச்சர் செஞ்சி மஸ்த்தான், ஆளுனர் செந்தில் தொண்டமான்



- உலகின் பல நாடுகளிலும் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களின் சங்கமம்.
- அவுஸ்ரேலியா, மலேசியா, பிசி, சிங்கப்பூர், தமிழ்நாடு, மொரிசியஸ், தென்ஆபிரிக்கா, கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின்... ஆசிரியர்கள் பங்குபற்றும் ஆய்வரங்கம்.

**தமிழ் ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

இடம் – ரொராண்டோ பல்கலைக் கழகம், ஸ்காபுரோ வளாகம்

1265 Military Trail, Toronto, ON

காலம் - 2024 யூன் 1, 2, 3

நேரம் - 9 AM முதல் 9 PM வரை

மேலதிக விபரங்களை அறிய

wtcc@padimuraitamil.com padimuraitamil.com 416-821-5773 | 416-843-9514

tasty தமிழா (TM)

# தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...



பனை வெல்லம்
தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்
சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்

இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்

*Tasty* தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.

Call: 416 293 4010

MAHAANS PICK & PRESS OIL MILL INC

# "ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவை"யின் 25வது வெள்ளி விழா அறிவித்தல்

இவ்வாண்டு 29ம், 30ம் திகதிகளில் ஈரோடு கொங்கு கலையரங்கத்தில் நடைபெறவுள்ள மேற்படி பெருவிழாவில் தமிழ்நாட்டின் முக்கிய ஆளுமைகளோடு அயலகத் தமிழ் ஆளுமைகளும் பங்கேற்கவுள்ளனர் என மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் அறிவித்துள்ளார்.

இந்தப் பெருவிழாவில் கலந்து கொண்டு இலக்கிய இன்பத்தை அனுபவிக்க அனைவரும் அழைக்கப்பெறுகின்றார்கள்.




# "பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பது இஸ்ரேலுக்கு எதிரானதல்ல; அமைதிக்கு ஆதரவானது" – கவிஞர் வைரமுத்து

**பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பது பற்றி, கவிஞர் வைரமுத்து வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:**



"அயர்லாந்து நார்வே ஸ்பெயின்
ஆகிய நாடுகள்
பாலஸ்தீனத்தைத் தனிநாடாக
அங்கீகரித்த தீர்மானத்தை
சர்வதேச சமூகம்
வழிமொழிய வேண்டும்

போர்க் களத்தில்
போர் சாக வேண்டும்

சிதறிய மண்டையோடுகளும்
உடைந்த கல்லீரல்களும்
இருதயத்தின்
கிழிந்த மாமிசங்களும்
சிறார்களின்
முற்றாத மூளைகளும்
தாய்ப்பாலோடு
தெறித்து விழுந்த மார்பகங்களும்
இனி எந்த நாட்டிலும்
தென்படக் கூடாது

ஸ்பெயின் பிரதமர் சொன்னதுபோல்
"பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பது
இஸ்ரேலுக்கு எதிரானதல்ல;
அமைதிக்கு ஆதரவானது"

இந்தியாவை ஆளப்போகும்
புதிய அரசும் பாலஸ்தீனத்தை
அங்கீகரிக்க வேண்டும்

ஐ.நாவில் பாடப்பட்ட
பாடலை நினைவூட்டுகிறோம்

"வெள்ளைப் பூக்கள்
உலகம் எங்கும் மலர்கவே
விடியும் பூமி
அமைதிக்காக விடிகவே."

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

# இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** பொறுப்பும், சிறப்பும் சேரும் வாரம். தொல்லைகள் ஒழியும். கூட்டுப்பிரார்த்தனை நன்மை தரும். இடையூறு அகலும். பணவரவு பெருகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். தொலைதூரப் பயணம் ஏற்படும். தொழிலில் கவனம் தேவை. பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும். நிம்மதியான காலம். விரயங்கள் கூடும். மருத்துவச் செலவுகள் குறையும். விவேகமான பேச்சுக்களால் தொல்லைகள் அகலும். வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. மனை வாங்கும் யோகம் உண்டு. தாய்ப்பாசம் அதிகரிக்கும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். சுமூகமான சூழ்நிலை பெருகும். இல்லத்தில் அமைதி கெடும். ஆண்களின் அதிகாரம் உயரும். சாதகமான வாய்ப்பு அமையும். வாகன மாற்றம் ஏற்படும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். வியாபாரம் சுமாராக இருக்கும். ஊதிய உயர்வு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 9,7,1,5
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,X




**மகரம்:** பெத்தவங்களால் பெருமை சேரும் வாரம். சோம்பல் அதிகரிக்கும். வருமானம் திருப்தி தரும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். முதலீடுகளில் கவனம் தேவை. சந்தோஷம் குடிகொள்ளும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் வெற்றியைத் தரும். விருந்தினர் வருகை உண்டு. வங்கி சேமிப்பு உயரும். இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். மதிப்புகள் கூடும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். அனுகூலச் செய்தியால் மனம் மகிழும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். மாற்று மருத்துவம் பலன் தரும். வரவுகள் மிகுதியாகும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகள் திருப்பம் ஏற்படும். குடும்பச் சுமை கூடும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. பங்குத்தொழில் லாபம் தரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. வாயில் தேடி வாய்ப்பு வரும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிட்டும். எடுத்த முயற்சி வெற்றி தரும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல்நலம் சீராகும். ஆன்மீகத்தில் ஆர்வம் கொள்வீர்கள். காதல் கை கூடும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,1,2,3
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




**கும்பம்:** மற்றவர்களால் மரியாதை கிடைக்கும் வாரம். ஆனந்தம் பெருகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். மனைவி, பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். பொது இடங்களில் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். குழப்பங்கள் அகலும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். எதிர்ப்புகள் மாயமாய் மறையும். பெண்களால் பெருமை உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படும். உடல்சோர்வு ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. வாழ்த்துக்கள் வந்து சேரும். மனநிம்மதி தரும். அலைச்சல் அதிகரிக்கும். புது முயற்சியில் ஈடுபடலாம். வாகனச் செலவு ஏற்படும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. மாணவர்களுக்கு சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். பெண்களுக்கு பெருமை சேரும் விதமாக அமையும். பயணங்களால் பலன் பெறுவீர்கள். பொறாமைகள் விலகும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கை கூடும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 4,3,1,2
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,G




**மீனம்:** நேர்த்தியும், கீர்த்தியும் கிடைக்கும் வாரம். தான தர்மங்கள் பலன் தரும். மனக்கசப்பு வந்து நீங்கும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அடையும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. கணவன், மனைவி உறவு மேம்படும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். உடல்நலம் மேம்படும். வாகனச்செலவு ஏற்படும். அலைச்சல் அதிகரிக்கும். வீண் குழப்பங்கள் வந்து போகும். காதல் பிரிவை ஏற்படுத்தும். கோதுமை தானம் தாய்நலம் சேர்க்கும். கஷ்டங்கள் மாறும். வீண் வம்பு அகலும். ஆரோக்கியம் சீராகும். விவேகமான பேச்சுக்கள் ஏற்படும். திறமைகள் வெளிப்படும். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். மனநெருக்கடிகள் தீரும். நல்லோர்களின் சந்திப்புக் கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். வீண் செலவுகளை தவிர்க்கவும். புதிய வாகனங்கள் வாங்க நேரிடும். பெண்களுக்கு பெருமையான நாளாக அமையும். பிரார்த்தனையால் பயன் பெறுவீர்கள். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். புதுமுயற்சி பலன் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். கடன் சுமைகள் தீரும். உதவிகள் கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 7,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- CONSTRUCTION
- COMMERCIAL
- VACANT LAND
- INDUSTRIAL




**RESIDENTIAL- COMMERCIAL**
- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today
**NESAN**
*Subramaniam*
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**
MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank
TD Canada Trust
NATIONAL BANK
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
Manulife
Desjardins
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
radius financial
RMG mortgages










26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்

உதயம் 1468 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 24, 2024


## 'UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL-2024
## கனடாவில் உதயன் சர்வதேச விருது விழா — 2024

இவ்வருடத்தின் கனடா உதயன் சர்வதேச விருது விழாவில் முதற் தடவையாக மூன்று வெளிநாட்டு விருதாளர்கள் கௌரவிக்கப்பட வுள்ளார்கள் அனைவரும் வருக! உலகின் பல நாடுகளிலிருந்தும் கனடாவிலிருந்தும் விருதுபெறும் வெற்றியாளர்களை வாழ்த்திச் செல்லுங்கள்.

இசை நடனம் ஆகியவையும் உங்களை மகிழ்விக்க காத்திருக்கின்றன. அனுமதிச் சீட்டுக்களுக்கு 416 732 1608 அல்லது 647 891 7725 (உள்ளே விபரமான விளம்பரம் 11ம் பக்கத்தில்)

## இலங்கையில் தமிழ் மக்களுக்கு நீதி இன்னும் கிடைக்கப் பெறவில்லை
## முள்ளிவாய்க்காலில் அஞ்சலி செலுத்திய சர்வதேச மன்னிப்பு சபை செயலாளர் நாயகம்

முள்ளிவாய்க்கால் முற்றத்தில் கடந்த 18-05-2024 அன்று சனிக்கிழமை இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் தின நினைவேந்தல் நிகழ்வில், சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் ஆக்னெஸ் காலமார்ட் கலந்துகொண்டு முள்ளிவாய்க்கால் நினைவு தூபிக்கு மலர் தூவி வணங்கினார்.

அக்னெஸ் கலமார்ட் இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

“இலங்கையில் தமிழ் மக்களுக்கான நீதி இன்னும் கிடைக்கப் பெறவில்லை என்பதை சர்வதேசத்துக்கு கூறுவதே எங்களின் முதன்மையான நோக்கம். அதற்குரிய விசாரணைகளை நடத்துவதற்கான படிநிலைகளை நாம் மேற்கொள்ளவுள்ளோம்” என தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கு கிழக்கு உள்ளிட்ட தமிழர் பகுதிகளில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடாத்துவதற்கு பாதுகாப்பு தரப்பினரால் பல்வேறு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்ட நிலையிலும் மக்களின் பேரெழுச்சியுடன் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## போரில் உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்து வெள்ளவத்தையில்
## நினைவேந்தல் நிகழ்வில் குழப்பத்தை விளைவிக்க முயன்ற "சிங்கள ராவய"



மூன்று தசாப்தகாலப்போர் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு 15 வருடங்கள் பூர்த்தியடைந்திருக்கும் நிலையில், தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகவும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை 18ம் திகதியன்று கொழும்பில் நடைபெற்றது.

மூன்று தசாப்தகாலப்போர் மிகமோசமான மனிதப்பேரழிவுடன் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு அன்றறைய 18-05-2024 தினத்துடன் (18) 15 வருடங்கள் பூர்த்தியடைந்திருக்கும் நிலையில், போரில் உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் வகையிலான நினைவேந்தல் நிகழ்வுகள் வட, கிழக்கு மாகாணங்களின் பல்வேறு பகுதிகளிலும் ஒழுங்குசெய்யப்பட்டிருந்ததுடன், பிரதான நிகழ்வு இறுதி யுத்தம் இடம்பெற்ற முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டுள்ள நினைவேந்தல் முற்றத்தில் நடைபெற்றது.

அதேவேளை, கடந்த 2022 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‘ பதவி விலகவேண்டும் எனவும், கட்டமைப்பு ரீ-தியான மறுசீரமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும் எனவும் வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் எழுச்சியடைந்த போராட்டங்களின் தளமாக அமைந்திருந்த காலிமுகத்திடல் “கோட்டா கோ கம“வில் 2022 மே 18 ஆம் திகதியன்று எவ்வித இன, மதபேதமுமின்றி சகலரும் இணைந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை அனுட்டித்து போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்தனர்.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

## கனடா ஒன்ராறியோ மாகாண அரசின் "ஒற்றைக் கட்டணத்" திட்டத்தினால்
## 5 மில்லியனுக்கும் அதிகமான பயணிகள் இதுவரை பயனடைந்துள்ளனர்

ஒன்ராறியோ அரசு மாநில பொதுப்போக்குவரத்துக் கட்டமைப்பில் “ஒற்றைக் கட்டண“ ஒருவழிப் பயணத் திட்டத்தை பெப்ரவரி 26ஆம் திகதியன்று அறிமுகப்படுத்தியது.

இவ்வொற்றைக் கட்டணத் திட்டம், ரிரிசி **(TTC)**, “கோ“ **(GO)** ஆகிய போக்குவரத்துச் சேவைகளுக்கிடையேயும் சிலசேவைகளுக்குமிடையிலான பயணிகள் மாறுகையின்போது பயணிகள் ஒன்றுக்கு மேற்பட்ட கட்டணங்களைச் செலுத்துவதைத் தவிர்த்து, அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு சராசரியாக 1600 டொலர்களைச் சேமிக்க உதவுகிறது. இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள போக்குவரத்துச் சேவைகளாவன:

இத்திட்டம் ஆரம்பித்த ஒரு சில மாதங்களிலேயே மேற்படி சேவைகளுக்கிடையிலான 5 மில்லியனுக்கும் அதிகமான பயணிகள் மா-றுகைகள் இடம்பெற்றுள்ளன. இந்தத் திட்டத்தின் பயனாக பலர் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

